# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2051/16 - 2017 දෙසැම්බර් මස 27 වැනි බදාදා - 2017.12.27

**2051/16 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 27 ஆந் திகதி புதன்கிழமை**

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

**வட மத்திய மாகாண மாகாண சபை**

*வட மத்திய மாகாணத்தின் 2017 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க அடகு பெறுநரின் பிரகடனம்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வட மத்திய மாகாண மாகாண சபையினால் அங்கீகரிக்கப்பட்டு கௌரவ மாகாண ஆளுநரால் 2017, திசெம்பர் 14 ஆந் திகதி உறுதிப்படுத்தப்பட்டுள்ள மேற் கூறப்பட்ட சட்டத் திருத்தங்கள் இத்தால் சகலரினதும் அறிவித்தலுக்காக என்னால் பகிரங்கப்படுத்தப்படுகின்றன.*

*எச். எல். எஸ். விஜேசிங்க,*
*செயலாளர்,*
*வடமத்திய மாகாண மாகாண சபை.*

*வடமத்திய மாகாண மாகாண சபை,*
*2017, திசெம்பர் 19*

**வட மத்திய மாகாணத்தின் மாகாண சபையின் 2017 ஆம் ஆண்டின் ------- இலக்க அடகு பிடிப்போர் நியதிச்சட்டம்**

*வட மத்திய மாகாணத்தினுள் அடகு பிடிப்போர் தொழிலை ஒழுங்குபடுத்துவதற்காகவும் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர் விளைவான கருமங்களுக்காகவும் ஏற்பாடு செய்வதற்கானதொரு நியதிச்சட்டம். இந்நியதிச்சட்டம் (90 ஆம் அத்தியாயமான) அடகு பிடிப்போர் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாததாகவுள்ளது.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வட மத்திய மாகாண சபையினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-*

*சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் திகதியும்.*

*1. இச்சட்டம் (இதனகத்துப்பின்னர் "நியதிச்சட்டம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 2017 ஆம் ஆண்டின் ……… ஆம் இலக்க, இலங்கை வடமத்திய மாகாணசபையின் அடகு பிடிப்போர் நியதிச்சட்டம் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன், (இதனகத்துப்பின்னர் "ஆளுநர்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) வடமத்திய மாகாண ஆளுநர் எந்தத் திகதியன்று நியதிச்சட்டத்தைச் சான்றுப்படுத்துகின்றாரோ அந்தத் திகதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.*


1A - PG 3845 - 107 (2017/12)



*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk.எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

நியதிச்சட்டத்தின் ஏற்புடைமை.

2. நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகள், வடமத்திய மாகாணத்தினுள்ளான வங்கிகள் தவிர்ந்த வேறு எவரேனுமாளினால் கொண்டு நடாத்தப்பட்ட அடகு பிடிப்போர் தொழிலுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

பாகம் I

## பதிவு செய்தலும் உரிமமளித்தலும்

அடகு பிடிப்பவரொருவரைப் பதிவுசெய்தல்.

3. ஆளெவரும், (இதனகத்துப்பின்னர் “மாகாண அரசிறை ஆணையாளர்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) வடமத்திய மாகாணத்தின் மாகாண அரசிறை ஆணையாளரிடம் அடகு பிடிப்பவரொருவராகப் பதிவுசெய்யப்பட்டாலொழிய, அத்தகைய ஆள் அடகு பிடிப்பவர் தொழிலைக் கொண்டு நடாத்துதலாகாது.

பதிவு செய்யப்படுவதற்கான விண்ணப்பம்.

4. (1) அடகு பிடிப்பவர் தொழிலைக் கொண்டுநடாத்துவதற்கு விரும்புகின்ற ஆளொவ்வொருவரும் விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் விதித்துரைக்கப்பட்ட கட்டணத்துடன் பதிவுக்காக மாகாண அரசிறை ஆணையாளருக்கு விண்ணப்பித்தல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், இலங்கைப் பிரசையாகவிராத தனியாளொருவர் அல்லது வெளிநாட்டுக் கம்பெனியொன்று அல்லது வெளிநாட்டுக் குழுமமொன்று, (இதனகத்துப்பின்னர் “மாகாணம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) வடமத்திய மாகாணத்தினுள் அடகு பிடிப்பவராகப் பதிவுசெய்யப்படுவதற்காக விண்ணப்பிப்பதற்குத் தகைமையற்றவராதல் அல்லது தகையற்றதாதல் வேண்டும்.

(2) ஆளெவரும் பின்வருமாறிருப்பின், அடகு பிடிப்பவர் தொழிலைக் கொண்டு நடாத்துவதற்காகப் பதிவுசெய்யப்படுதலாகாது :-

(அ) அவர் ஏல விற்பனையாளரொருவராகவிருப்பின்

(ஆ) அவர் பதிவுக்கான விண்ணபத்தை எந்தத் திகதியன்று செய்கின்றாரோ அந்தத் திகதிக்கு நேர்முற்போந்த ஐந்தாண்டுகளின்போது எந்நேரத்திலும் அவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாகக் காணப்பட்டிருப்பின் அல்லது

(இ) அவர் எந்தக் கடையில் அல்லது இடத்தில் அடகு பிடிப்பவர் தொழிலைக் கொண்டு நடாத்துவதற்கு உட்கருதுகின்றாரோ அந்தக் கடை அல்லது இடம், அல்லது அவரினால் உடைமைகொள்ளப்பட்ட அருகாமையிலுள்ள ஏதேனும் வீடு அல்லது இடம், மாகாண அரசிறை ஆணையாளரின் அபிப்பிராயத்தில்,அடகு பிடிப்பவர் தொழிலைக் கொண்டு நடாத்துவதற்குப் பொருத்தமானதல்ல தாகவிருப்பின்.

அடகுபிடிப்பவர் தொழிலுக்கு உரிமமளித்தல்.

5. (1) இந் நியதிச்சட்டம் நடைமுறைக்கு வருகின்றதன் மீதும் அதன் பின்னரும், 4 ஆம் பிரிவின்கீழ் பதிவுசெய்யப்பட்ட ஆளெவரும், அந்நோக்கத்துக்காக மாகாண அரசிறை ஆணையாளரினால் வழங்கப்பட்ட உரிமமொன்றின் அதிகாரத்தின் கீழன்றி, ஏதேனும் அடகு பிடிப்பவர் தொழிலில் ஈடுபடுதலாகாது.

(2) நான்காம் பிரிவின்கீழ் பதிவுசெய்யப்பட்ட ஆளொவ்வொருவரும், ஒவ்வொரு தொழிலிடத்துக்கும் அதன் கிளைக்கும் தனிவேறான உரிமத்தைப் பெறுவதற்குத் தனிவேறான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(3) ஒவ்வோர் உரிமமும் எந்நாளன்று வழங்கப்படுகின்றதோ அந்நாளன்று திகதியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அடுத்துவரும் திசெம்பர் மாதத்தின் முப்பத்தோராம் நாளன்று முடிவுறுதலும் வேண்டும்.

(4) மாகாண அரசிறை ஆணையாளர், (1) ஆம் உட்பிரிவின்கீழான தமது அதிகாரத்தை எழுத்தில் எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்குக் கையளிப்பதற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

உரிமத்துக்கான விண்ணப்பமும் அத்தகைய விண்ணபத்தைச் செய்முறைப் படுத்துதலும்.

6. (1) ஐந்தாம் பிரிவின் கீழான உரிமமொன்றுக்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும் விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் மாகாண அரசிறை ஆணையாளருக்குச் செய்யப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் சமர்ப்பிக்கப்பட்ட ஒவ்வொரு விண்ணப்பமும் தேவைப்பட்ட எல்லா விபரங்களும் பற்றிய பூரணமான மற்றும் செம்மையான தகவலைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், விதித்துரைக்கப்பட்ட கட்டணத்துடன் சேர்த்து அனுப்பப்படுதலும் வேண்டும்.

(3) (அ) அடகு பிடிப்பவர் தொழிலொன்று தனியாளொருவரினால் கொண்டுநடாத்தப்பட்டு அவர் இறப்பதன்மேல் அத்தகைய தொழிலை ஆளொருவருக்கு மாற்றளிப்பதற்கு அவர் உட்கருதுமிடத்து, அத்தகைய தனியாள், 4 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, அத்தகைய பதிலாளைப் பெயர் குறித்து நியமித்தல் வேண்டும்.

(ஆ) அத்தகைய பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஆளின் உரிமைகளையும் கடப்பாடுகளையும் கொண்டுள்ள ஆவணமொன்று, (1) ஆம் உட்பிரிவின் கீழான விண்ணப்பத்துடன் சேர்த்தனுப்பப்படுதல் வேண்டும். அத்தகைய ஆவணம் இரு திறத்தவர்களினாலும் கையொப்பமிடப்படுதல் வேண்டும்.

(4)அடகு பிடிப்பவர் தொழில், கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத எவரேனும் ஆட்கள் குழுவொன்றினால் கொண்டுநடாத்தப்படுமிடத்து, அத்தகைய ஆட்கள் குழு, அப்பயன்பட்ட சான்றிதழின் அல்லது உடன்படிக்கையின் பிரதியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(5) ஓராம் உட்பிரிவின்கீழ் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தில் அடங்கியுள்ள தகவலையும் விபரங்களையும் கவனத்தில் கொண்டதன்மேல், 4 ஆம் பிரிவின்கீழ் உரிமமொன்று வழங்கப்படுவதற்கான பொருத்தமானதன்மை பற்றி விதித்துரைக்கப்பட்டவாறான தேவைப்பாடுகளை விண்ணப்பகாரர் நிறைவேற்றியுள்ளாரென மாகாண அரசிறை ஆணையாளர் திருப்திப்படுமிடத்து, அட்டவணை I இல் தரப்பட்டுள்ள படிவம் 'அ' இல் அத்தகைய உரிமத்தை அவர் வழங்குதல் வேண்டும்.

(6) பொய்யான, பிழைவழியுய்க்கும் அல்லது விபரங்களைக் கொண்டுள்ளதாகக் காணப்படும் விண்ணப்பம் நிராகரிக்கப்படுதல் வேண்டும்.

7. (1) ஒவ்வோர் அடகு பிடிப்பவரும், உரிமம் கிடைக்கப்பெற்ற பின்னர் உடனடியாக ஆனால் அடகு பிடிப்பவர் தொழிலைத் தொடங்க முன்னர், விதித்துரைக்கப்பட்ட தொகையைப் பிணைப்பொறுப்பாக விதித்துரைக்கப்பட்ட முறையில் மாகாண அரசிறை ஆணையாளரிடம் வைப்பிலிடுதல் வேண்டும். பிணைப்பொறுப்பு.

(2) தொழில் மூடிவிடப்படும் அல்லது மாற்றளிக்கப்படும் பட்சத்தில், (1) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி வைப்பிலிடப்பட்ட பணத்தொகை, அத்தகைய அடகு பிடிப்பவரினால் பொருட்களை அடகு வைப்பவருக்குச் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் தொகையைக் கழித்த பின்னர், அத்தகைய அடகு பிடிப்பவருக்கு மீளளிக்கப்படுதல் வேண்டும்.

8. ஆறாம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்று- உரிமத்தின் படிவமும் கால எல்லையும்.

(அ) உரிமத்தில் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய நியதி நிபந்தனைகளுக்கு அமைந்ததாகவிருத்தல் வேண்டும்.

(ஆ) உரிமத்தில் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய திகதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும் அத்துடன்,

(இ) முன்னர் இல்லாதொழிக்கப்பட்டாலொழிய, உரிமத்தில் குறித்துரைக்கப்பட்டவாறான காலப்பகுதிக்கு வலுவிலிருத்தல் வேண்டும்.

9. (1) உரிமமொன்று, அவ்வுரிமம் முடிவுறும் திகதிக்கு முன்னர் முப்பது நாட்களுக்குக் குறையாமல் விதித்துரைக்கப்பட்ட புதுப்பித்தற் கட்டணத்துடன் சேர்த்து விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் மாகாண அரசிறை ஆணையாளருக்கு அந்நோக்கத்துக்கான விண்ணப்பமொன்று சமர்ப்பிக்கப்படுவதன்மேல் புதுப்பிக்கப்படலாம். ஓர் உரிமத்தைப் புதுப்பித்தல்.

(2) நேர்முற்போந்த நிதியாண்டுக்காக அத்தகைய அடகு பிடிப்பவரின் தொழில் பற்றிய வருடாந்தக் கணக்குக்கூற்றின் பிரதி, (1) ஆம் உட்பிரிவின்கீழ் உரிமத்தைப் புதுப்பிப்பதற்காகச் செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் இணைக்கப்படுதல் வேண்டும்.

(3) மாகாண அரசிறை ஆணையாளர், பின்வரும் சந்தர்ப்பங்களில், (1) ஆம் உட்பிரிவின்கீழான விண்ணப்பத்தைப் பெற்றதன்மீது உரிமமொன்றைப் புதுப்பிக்கலாம்:-

(அ) உரிமம் பெற்றவர், வழங்கப்பட்ட உரிமத்தின் நியதிநிபந்தனைகளை மீறாதுள்ளவிடத்து அல்லது அவற்றுக்கு முரணான எதனையும் செய்யாதுள்ளவிடத்து

(ஆ) உரிமம் பெற்றவர், இந்நியதிச்சட்டத்தின் எவையேனும் ஏற்பாடுகளை அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளை மீறாதுள்ளவிடத்து அல்லது

(இ) மாகாண அரசிறை ஆணையாளரின் அபிப்பிராயத்தில், அடகு பிடிப்பவர் தொழிலை அவ்வாள் எந்தக் கடையில் அல்லது இடத்தில் கொண்டு நடாத்துவதற்கு உட்கருதுகின்றாரோ அந்தக் கடை அல்லது இடம், அல்லது அவரினால் உடைமைகொள்ளப்பட்ட அருகாமையிலுள்ள ஏதேனும் வீடு அல்லது இடம், அடகு பிடிப்பவர் தொழிலைக் கொண்டு நடாத்துவதற்குப் பொருத்தமானதாகவுள்ளவிடத்து.

(4) இப்பிரிவின்கீழ் புதுப்பிக்கப்பட்ட உரிமமொன்று தொடர்பில் 7 ஆம் பிரிவின் ஏற்புடையனவாதல் வேண்டும்.

உரிமமொன்றை இடைநிறுத்துதல்.

10. உரிமமொன்று பின்வரும் சந்தர்ப்பங்களில் மாகாண அரசிறை ஆணையாளரினால் இடைநிறுத்தப்படலாம்:-

(அ) உரிமம் பெற்றவர், நியதிச்சட்டத்தின் கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்கு விதிகளின் கீழ் தவறொன்றைப் புரிந்தமைக்காகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளவிடத்து அல்லது

(ஆ) உரிமம் பெற்றவர், நியதிச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டை அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியை மீறியுள்ளவிடத்தும், அத்தகைய மீறுகையின் பாரதூரமானதன்மை உரிமத்தை இரத்துச் செய்தலைத் தேவைப்படுத்தாதவிடத்தும்.

உரிமத்தை இரத்துச் செய்தல்

11. உரிமமொன்று பின்வரும் சந்தர்ப்பங்களில் மாகாண அரசிறை ஆணையாளரினால் இரத்துச்செய்யப்படுதல் வேண்டும் :-

(அ) பொய்யான, பிழைவழியுய்க்கும் அல்லது செம்மையற்ற தகவலை வழங்குவதன்மூலம் உரிமம் பெறப்பட்டுள்ளதெனக் காணப்படுமிடத்து.

(ஆ) உரிமம் பெற்றவர் களவாடப்பட்ட பண்டங்களை வைத்திருந்துள்ளவிடத்து.

(இ) உரிமம் பெற்றவர் ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழான தவறொன்றுக்குக் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ள விடத்து.

(ஈ) உரிமம் பெற்றவர் இந் நியதிச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டை அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியை மீறியுள்ளவிடத்து அல்லது.

(உ) உரிமம் பெற்றவர், அத்தகைய உரிமம் எந்த நியதிநிபந்தனைக்கமைய வழங்கப்பட்டதோ அந்த ஏதேனும் நியதிநிபந்தனைக்கு மீறுதலாக அல்லது அதற்கு முரணாகச் செயலாற்றியுள்ளவிடத்து.

காரணங்கள் அறிவிக்கப்படுதல் வேண்டும்.

12. (1) ஓர் உரிமத்தை வழங்குவதற்கான அல்லது புதுப்பிப்பதற்கான விண்ணப்பம் மறுக்கப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய மறுப்புக்கான காரணங்கள் மாகாண அரசிறை ஆணையாளரினால் பதியப்படுதல் வேண்டும். மாகாண அரசிறை ஆணையாளர், பதிவஞ்சலில் அனுப்பப்படும் எழுத்திலான தொடர்பாடலின்மூலம் அத்தகைய மறுப்புப் பற்றி முப்பது நாட்காலப்பகுதியினுள் விண்ணப்பகாரருக்கு அறிவித்தல் வேண்டும்.

(2) உரிமமொன்று, விடயத்துக்கேற்ப, இடைநிறுத்தப்படுமிடத்து அல்லது இரத்துச்செய்யப்படுமிடத்து, அத்தகைய இடைநிறுத்துகை அல்லது இரத்துச்செய்கை பற்றிப் பதிவஞ்சலில் அனுப்பப்படும் எழுத்திலான தொடர்பாடலின் மூலம் உரிமம்பெற்றவருக்கு உடனடியாக அறிவித்தல் மாகாண அரசிறை ஆணையாளரின் கடமையாதல் வேண்டும்.

*13. (1) உரிமமொன்றை வழங்குவதற்கு அல்லது புதுப்பிப்பதற்கு மறுக்கின்ற முடிபினால் அல்லது வழங்கப்பட்ட உரிமமொன்றை இடைநிறுத்தியமையினால் அல்லது இரத்துச் செய்தமையினால் இன்னலுறும் எவரேனுமாள், மறுப்பு அல்லது இடைநிறுத்துகை அல்லது இரத்துச்செய்கை பற்றி அத்தகைய ஆளுக்கு அறிவிக்கின்ற எழுத்திலான தொடர்பாடல் பெறப்பட்ட திகதியிலிருந்து மூன்று மாதங்களினுள் (இதனகத்துப்பின்னர் "பிரதம செயலாளர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) மாகாணத்தின் பிரதம செயலாளருக்கு அத்தகைய முடிபுக்கெதிராக மேன்முறையீடு செய்யலாம்.* — *மேன்முறையீடுகள்*

*(2) ஓராம் உட்பிரிவின்கீழ் சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் மேன்முறையீட்டின் மீதான முடிபு, அத்தகைய மேன்முறையீடு பெறப்பட்டதிலிருந்து அறுபது நாட்களினுள் செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய மேன்முறையீட்டைச் செய்கின்ற ஆளுக்கு அதன்மீது செய்யப்பட்ட முடிபு பற்றி அறிவிக்கப்படுதலும் வேண்டும்.*

*(3) பிரதம செயலாளர் (1) ஆம் உட்பிரிவின்கீழ் அவருக்குச் செய்யப்பட்ட ஏதேனும் மேன்முறையீட்டின்மீது விசாரணையொன்றை நடாத்தலாம்.*

*(4) இப்பிரிவின்கீழ் செய்யப்பட்ட ஏதேனும் மேன்முறையீட்டின்மீது பிரதம செயலாளரின் முடிபு இறுதியானதாதல் வேண்டும்.*

*14. (1) அத்தகைய அடகு பிடிப்பவர் தொழில் எந்த இடப்பரப்பினுள் கொண்டுநடாத்தப்படுவதற்கு உட்கருதப்படுகின்றதோ அந்த இடப்பரப்புக்குப் பொறுப்பாகவுள்ள பொலிஸ் கண்காணிப்பாளருக்கு 6 ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட உரிமத்தின் பிரதியை மாகாண அரசிறை ஆணையாளர் அனுப்பிவைத்தல் வேண்டும்.* — *பொலிசுக் கண்காணிப்பாளருக்கு அறிவிப்பதற்கான கடமை.*

*(2) விடயத்துக்கேற்ப, 10 ஆம் அல்லது 11 ஆம் பிரிவின்கீழ் உரிமத்தின் ஏதேனும் இடைநிறுத்துகை அல்லது இரத்துச்செய்கை பற்றி அத்தகைய அடகு பிடிப்பவர் தொழில் எந்த இடப்பரப்பினுள் கொண்டு நடாத்தப்பட்டதோ அந்த இடப்பரப்புக்குப் பொறுப்பாகவுள்ள பொலிஸ் கண்காணிப்பாளருக்கு அறிவிப்பது மாகாண அரசிறை ஆணையாளரின் கடமையாதல் வேண்டும்.*

*15. ஆறாம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட உரிமத்தை வைத்திருப்பவர், மாகாண அரசிறை ஆணையாளரின் எழுத்திலான அங்கீகாரமின்றி அவ்வுரிமத்தை எவரேனுமாளுக்குக் கைமாற்றுதலாகாது.* — *மாகாண அரசிறை ஆணையாளரின் முன்னங்கீகாரமின்றி உரிமத்தை கைமாற்றுதல்.*

*16. உரிமம் பெற்ற அடகு பிடிப்போரின் பெயர்கள், தொழிலிடங்களின் பெயர்கள், அடகு பிடிப்பவர் தொழில் கொண்டுநடாத்தப்படும் வளவுகளின் முகவரிகள் என்பவற்றைக் கொண்டுள்ள அறிவித்தலொன்றை மாகாண அரசிறை ஆணையாளர் வர்த்தமானியில் வருடாந்தம் வெளியிடுதல் வேண்டும்.* — *உரிமம் பெற்றவர்களின் விபரங்களை வெளியிடுதல்.*

## பாகம் II
## அடகு பிடிப்போரின் தத்துவங்களும் பணிகளும் கடமைகளும்

*17. மூன்று மாதங்களை விஞ்சுகின்ற ஏதேனும் காலப்பகுதிக்காக இலங்கையை விட்டுச்செல்வதற்கு உட்கருதுகின்ற அடகு பிடிப்பவர் ஒவ்வொருவரும் -* — *இலங்கையில் இல்லாமை பற்றிய அறிவித்தல்*

*(அ) அவரது இல்லாமை பற்றி மாகாண அரசிறை ஆணையாளருக்கு எழுத்திலான அறிவித்தல் கொடுத்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஆணையாளரின் எழுத்திலான அங்கீகாரத்தைப் பெறுதலும் வேண்டும்.*

*(ஆ) அவர் இல்லாதபோது தொழிலைக் கொண்டு நடாத்துவதற்கு ஆளொருவரைப் பெயர்குறித்து நியமித்தல் வேண்டும்.*

*18. அடகு பிடிப்பவரெவரும், ஏதேனும் நாளில் மு.ப. 8.00 மணிக்கு முன்னரும் பி.ப 8.00 மணிக்குப் பின்னரும் அடகு க்காக ஏதேனும் பொருளை ஏற்றுக்கொள்ளுதலாகாது.* — *அடகு பிடிப்பவரின் தொழில் நேரங்கள்*

*அடகு பிடிப்பவர் ஏல விற்பனையாளராகச் செயலாற்றுதலாகாது.*

*19.* அடகு பிடிப்பவரெவரும் ஏலவிற்பனையாளர் தொழிலைக் கொண்டு நடாத்துதலாகாது.

*அடகு பிடிப்பவரினால் காண்பிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள்.*

*20.* அடகு பிடிப்பவர் ஒவ்வொருவரும் -

(அ) அவரது கடையின் அல்லது தொழிலிடத்தின் வெளிக்கதவின் மீது வாசிக்கத்தக்க எழுத்துக்களில், அவரது தொழிலின் பெயரை, உரிமத்தின் பதிவிலக்கத்தை மற்றும் "அடகு பிடிப்பவர்" என்ற சொல்லைச் சிங்களத்திலும், தமிழிலும், ஆங்கிலத்திலும் வெளிக்காட்டிவைத்தல் வேண்டும் அத்துடன்.

(ஆ) அட்டவணை - II இல் தரப்பட்டுள்ள விபரங்களைக் கொண்டுள்ள சிங்களத்திலும், தமிழிலும், ஆங்கிலத்திலுமான அறிவித்தலை அவரது தொழிலிடத்தின் துலாம்பரமானவோர் இடத்தில் வெளிக்காட்டிவைத்தல் வேண்டும்.

*அடகு பிடிப்போரினால் வைத்திருக்கப்படவேண்டிய புத்தகம், தரவு, படிவம் அல்லது ஆவணம்.*

*21.* (1) ஏதேனும் புத்தகத்தில், தரவில், படிவத்தில் அல்லது ஆவணத்தில் எவையேனும் விபரங்கள் பதியப்பட வேண்டுமென நியதிச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்படுமிடத்து, அத்தகைய விபரங்கள் சிங்கள அல்லது தமிழ் மொழியில் பதியப்படுதல் வேண்டும்.

(2) ஒவ்வோர் அடகு பிடிப்பவரும் அட்டவணை I இல் தரப்பட்டுள்ளவாறு படிவம் "ஆ" இலுள்ள அடைவுப்பொருள் புத்தகத்தையும் படிவம் "இ" இலுள்ள அடைவுப்பொருள் விற்பனைப் புத்தகத்தையும் பேணுதல் வேண்டும்.

(3) மாகாண அரசிறை ஆணையாளருக்கு (2) ஆம் உட்பிரிவில் தரப்பட்டுள்ளவாறாக ஆவணங்களைச் சமர்ப்பிக்கும்படி அடகு பிடிப்பவர் தேவைப்படுத்தப்படின் அவ்வாறு செய்வது அவரது கடமையாதல் வேண்டும்.

*அடகுப் பற்றுச்சீட்டு*

*22.* (1) ஒவ்வோர் அடகு ப் பற்றுச்சீட்டும், அட்டவணை - I இல் தரப்பட்டுள்ளவாறான படிவம் "ஈ" நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

(2) இந் நியதிச்சட்டத்துக்கான அட்டவணை - II இல் குறித்துரைக்கப்பட்ட விபரங்கள், அட்டவணை- 1 இல் தரப்பட்டுள்ளவாறு படிவம் "ஈ" இன் பிற்புறத்தில் வாசிக்கத்தக்கவையாக சிங்களத்தில் அல்லது தமிழில் அல்லது ஆங்கிலத்தில் அச்சிடப்படுதல் வேண்டும்.

(3) அடைவுப்பொருளொன்று அடகு வைக்கப்படுமிடத்து, அத்தகைய அடைவுப்பொருள் தொடர்பான அடகு ப் பற்றுச்சீட்டின் இதழ், பற்றுச்சீட்டிலுள்ள விதித்துரைக்கப்பட்ட பெறுமதிக்கான முத்திரைத் தீர்வையைக் கொண்டிருத்தல் வேண்டும். அத்தகைய முத்திரைகளை வழங்குவதில் உறப்பட்ட செலவு, அடகு பிடிப்பவரினால் பொறுக்கப்படுதல் வேண்டும்.

(4) ஏதேனும் பொருள் அடகு க்காக ஒப்படைக்கப்படுமிடத்து -

(அ) அடகு வைப்பவர் அடகு ப்பற்றுச்சீட்டின் அடியிதழைக் கையொப்பமிடுதல் வேண்டும்.

(ஆ) அடகு பிடிப்பவர் அடகு ப்பற்றுச்சீட்டின் மூல இதழைக் கையொப்பமிட்டு அடியிதழை அடகு வைப்பவருக்குக் கொடுத்தல் வேண்டும்.

(இ) அடகு வைப்பவர் மூல இதழையும் அடியிதழையும் ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

(ஈ) அடகுப்பற்றுச்சீட்டின் மூல இதழ் அடகு வைப்பவருக்குக் கொடுக்கப்படுதல் வேண்டும் அத்துடன்,

(உ) அடகுப் பற்றுச்சீட்டில் வருடாந்த வட்டி குறித்துரைக்கப்படுதல் வேண்டும்.

23. அடகு பிடிப்பவரெவரும், அட்டவணை - II இல் குறித்துரைக்கப்பட்ட வீதங்களை விஞ்சுகின்ற வட்டியை விதிப்பனவு வெய்தலாகாது:. வட்டி.

ஆயின், ஓர் அடைவுப்பொருள்மீது கொடுக்கப்பட்ட கடன் தொடர்பில் தொழில் மொத்த விற்பனைவரவு வரி செலுத்தப்படற்பாலதாகவிருக்குமிடத்து இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளில் உள்ளடக்கப்பட்டதெதுவும், அடகு வைப்பவரிடமிருந்து அத்தகைய வரியை அறவிடுவதிலிருந்து அடகு பிடிப்போரைத் தடைசெய்வதாகக் கருதப்படுதலாகாது.

## பாகம் III

### அடவுப்பொருட்கள்

**24.** ஒவ்வோர் அடவுப்பொருளும், அடகு வைத்த நாளிலிருந்து, அந்நாள் நீங்கலாக, (இதனகத்துப்பின்னர் "மீட்புக் காலப்பகுதி" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) பன்னிரெண்டு மாத காலப்பகுதியினுள் மீட்கப்படற்பால தாதல் வேண்டும். மீட்புக் காலப்பகுதி.

**25.** நியதிச்சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், நியதிச்சட்டத்தில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு அடவுப்பொருள் ஒவ்வொன்றும் கையுதிர்க்கப்படும் வரை, மீட்புக் காலப்பகுதி முடிவுற்றிருந்தபோதிலும், தொடர்ந்தும் மீட்கப்படற்பாலதாதல் வேண்டும். விற்பனை செய்யப்படும் வரை அடவுப் பொருட்கள் மீட்கப்படற் பாலனவாகத் தொடர்ந்திருத்தல்.

**26.** (1) அடகு வைப்பவர், அடவுப்பொருள் தொடர்பான அடகுப் பற்றுச்சீட்டின் மூல இதழை அடகு பிடிப்பவருக்கு ஒப்படைத்து அத்தகைய இதழை அடகு பிடிப்பவரின் அல்லது அவரது முகவரின் அல்லது சேவையாளரின் சமூகத்தில் கையொப்பமிட்டால், அவர் ஓர் அடைவுப்பொருளை மீட்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும். ஓர் அடைவுப் பொருளை மீட்பதற்கான நடவடிக்கை முறை.

(2) அடகு வைப்பவர் தவிர்ந்த ஆளொருவர் அடவுப்பொருள் தொடர்பான அடகுப் பற்றுச்சீட்டின் மூல இதழை, அடகு வைப்பவரின் கையொப்பத்தை முறையாகப் புறக்குறிப்பிட்டு அத்தகைய ஆள் அடகு பிடிப்பவருக்கு ஒப்படைத்தால் மற்றும் அத்தகைய ஆள் அடகு பிடிப்பவரின் அல்லது அவரது முகவரின் அல்லது சேவையாளரின் சமூகத்தில் அத்தகைய இதழைக் கையொப்பமிட்டால், அவ்வடைவுப்பொருளை மீட்பதற்கு உரித்தடையவராதல் வேண்டும்.

(3) அடகு வைப்பவரின் இறப்பு அல்லது இயலாமை காரணமாக, அடவுப்பொருள் தொடர்பான அடகுப் பற்றுச்சீட்டின் மூல இதழை வைத்திருப்பவர், அவ்வடவுப்பொருளை மீட்பதற்கு உரித்துடையவரென உரிமைகோரி ஆனால் அடகு வைப்பரினால் முறையாகப் புறக்குறிப்பிடப்பட்டு கையொப்பமிடப்பட்ட அடகுப்பற்றுச்சீட்டின் மூல இதழை அடகு பிடிப்பவருக்கு ஒப்படைக்க இயலாதுள்ளவிடத்து அடகு பிடிப்பவர், அடகுப் பற்றுச்சீட்டின் அத்தகைய மூல இதழை வைத்திருப்பவர், அவ்வடவுப்பொருள் தொடர்பான அடகுப்பற்றுச்சீட்டின் சொல்லப்பட்ட மூல இதழை, அத்தகைய வைத்திருப்பவரினால் சமாதான நீதவான் அல்லது சத்திய ஆணையாளரொருவர் முன்னர் முறையாகக் கையொப்பமிடப்பட்டதும் அட்டவணை - I இல் தரப்பட்டுள்ள படிவம் "உ" இலுள்ளதுமான ஒரு வெளிப்படுத்துகையுடன் சேர்த்து அவருக்கு ஒப்படைத்தால், அவ்வடவுப்பொருள் மீட்கப்படுவதற்கு அனுமதியளித்தல் வேண்டும்.

(4) உட்பிரிவுகள் (1), (2), (3) என்பவற்றின் ஏற்பாடுகளுக்கமைய, அடகு பிடிப்பவர், கடனையும், அதன்மீது வருமதியான வட்டியையும், அத்தகைய கடன் தொடர்பில் செலுத்தப்படற்பாலதான தொழில் மொத்த விற்பனைவரவு வரி ஏதேனுமிருப்பின் அதனையும் கொடுப்பனவு செய்வதன்மேல், அடகு வைப்பவருக்கு அல்லது அடவுப்பொருள் தொடர்பான அடகுப் பற்றுச்சீட்டை வைத்திருப்பவருக்கு அடவுப்பொருளை ஒப்படைத்தல் வேண்டுமென்பதுடன், அடகு பிடிப்பவர், அவ்வடவுப்பொருளை அவ்வாறு ஒப்படைத்தமை தொடர்பில் இத்தால் நட்டோத்தரவாதமளிக்கவும்படுகின்றார்.

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய வைத்திருப்பவர், அடகு ப்பற்றுச்சீட்டின் மூல இதழின் உடைமையைச் சட்டவிரோதமாகப் பெற்றுள்ளாரெனச் சந்தேகிப்பதற்கு அடகு பிடிப்பவருக்குக் காரணமிருப்பின், அடகு பிடிப்பவர், அத்தகைய நிகழ்வை மிகக்கிட்டிய பொலிசு நிலையத்துக்கு அறிவித்தல் வேண்டும்.

அடவுப் பொருளின் மதிப்பிறக்கத்துக்கான நட்டஈடு.

**27.** அடகு பிடிப்பவரின் தவறுகை, அசட்டை அல்லது வேண்டுமென்ற துர்நடத்தைமூலம் அல்லது அதனூடாக, அடவுப்பொருள், அது அடகு வைக்கப்பட்ட நேரத்தில் கொண்டிருந்த பெறுமதிக்குக் குறைவான பெறுமதியை உடையதாக வந்துள்ளது அல்லது ஆக்கப்பட்டுள்ளது என அடவுப்பொருளை மீட்பதற்கு உரித்துள்ளவரும் முனைகின்றவருமான ஆளொருவர் நியாயாதிக்கங்கொண்டுள்ள குடியியல் நீதிமன்றமொன்றின் திருப்திக்குக் காண்பித்தால், நீதிமன்றம், அது தகுதியானதெனக் கருதினால், அடவுப்பொருளின் சொந்தக்காரரினது திருப்திக்கு நியாயமான நட்டஈட்டை அளித்தல் வேண்டுமென்பதுடன், நட்டஈட்டுத்தொகை, அடகு பிடிப்பவருக்குச் செலுத்தப்படற்பாலதான தொகையிலிருந்து கழிக்கப்படுதலும் வேண்டும், அல்லது நீதிமன்றம் பணிக்கக்கூடியவாறான அத்தகைய முறையில் அடகு பிடிப்பவரினால் செலுத்தப்படுதலும் வேண்டும்.

பற்றுச்சீட்டில்லாத சொந்தக்காரர்களுக்கும் அடகு வைப்பவருக்கு மான பாதுகாப்பு.

**28.** (1) ஓர் அடவுப்பொருளின் சொந்தக்காரராகவுள்ளாரென உரிமைகோருகின்ற, ஆனால் அடகு ப் பற்றுச்சீட்டின் மூல இதழை வைத்திராத எவரேனுமாள், அல்லது அடகு ப் பற்றுச்சீட்டின் மூல இதழை வைத்திருப்பதற்கு உரித்துடையவராகவுள்ளாரென உரிமைகோருகின்ற, ஆனால் அடகுப் பற்றுச்சீட்டின் மூல இதழ் காணாமற் போயுள்ளது, களவாடப்பட்டுள்ளது, தவறவிடப்பட்டுள்ளது, அழிக்கப்பட்டுள்ளது அல்லது அவரிடமிருந்து மோசடியான முறையில் பெறப்பட்டுள்ளது எனச் சார்த்துகின்ற எவரேனுமாள், சமாதான நீதவான் அல்லது சத்திய ஆணையாளர் ஒருவர் முன்னர் முறையாகச் செய்யப்பட்டதும், அட்டவணை - I இல் தரப்பட்டுள்ள படிவம் "உ" இலுள்ளதுமான வெளிப்படுத்துகையொன்றை அடகு பிடிப்பவருக்குக் கொடுத்துதவலாம்.

ஆயின், ஓர் அடவுப்பொருளை மீட்கும் நோக்கத்துக்காக, அவர், 26 ஆம் பிரிவினால் தேவைப் படுத்தப்பட்டவாறு அதற்கான அடகு ப்பற்றுச்சீட்டின் மூல இதழையல்லாது அடகுப்பற்றுச்சீட்டின் அடியிதழைக் கையொப்பமிடுதல் வேண்டும்.

(2) அடகு பிடிப்பவர், முக்கியமான ஏதேனும் விபரத்தில் வெளிப்படுத்துகை மோசடியானது அல்லது பொய்யானது என உள்ளபடியான அல்லது ஆக்கச்சார்பு அறிவித்தல் அவருக்கிருந்தாலொழிய, அடவுப்பொருளை ஒப்படைப்பதற்காக அல்லது வெளிப்படுத்துகையுடன் இசைந்தொழுக வேறுவகையில் செயலாற்றுவதற்காக அவருக்கு இத்தால் நட்டோத்தரவாதமளிக்கப்படுகின்றது.

அடவுப் பொருள் மீட்கப்பட்ட அல்லது விற்பனை செய்யப்பட்ட பின்னர் அடகு பிடிப்ப வரினால் அடகுப் பற்றுச்சீட்டு வைத்தி ருக்கப்படுதல்.

**29.** (1) ஓர் அடவுப்பொருளை மீட்கும் நோக்கத்துக்காக அடகுப் பற்றுச்சீட்டின் மூல இதழ் அடகு பிடிப்பவருக்கு ஒப்படைக்கப்படுமிடத்து, அடகு பிடிப்பவர், அடகுப் பற்றுச்சீட்டின் மூல இதழையும் அடகுப்பற்றுச்சீட்டின் அடியிதழையும் அவ்வடவுப்பொருள் மீட்கப்பட்ட திகதியிலிருந்து கணிக்கப்பட்ட இரண்டாண்டு காலப்பகுதிக்குத் தனதுடைமையில் வைத்திருத்தல் வேண்டும்.

(2) அடவுப்பொருளொன்று தொடர்பான அடகுப் பற்றுச்சீட்டின் இதழ் ஒப்படைக்கப்படாமல் அடவுப்பொருள் மீட்கப்படுமிடத்து, அடகு பிடிப்பவர், அவ்வடவுப்பொருள் மீட்கப்பட்ட திகதியிலிருந்து கணிக்கப்பட்ட இரண்டாண்டு காலப்பகுதிக்கு அடவுப்பொருள் தொடர்பான அடகுப் பற்றுச்சீட்டின் அடியிதழையும் அத்தகைய மீட்பு நோக்கத்துக்காக 28 ஆம் பிரிவின்கீழ் அவருக்குக் கொடுத்துதவப்பட்ட வெளிப்படுத்து கையையும் தனதுடைமையில் வைத்திருத்தல் வேண்டும்.

(3) நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அடவுப்பொருளொன்று விற்பனை செய்யப்படுமிடத்து, அடகு பிடிப்பவர், விற்பனைத் திகதியிலிருந்து கணிக்கப்பட்ட பன்னிரெண்டு மாத காலப்பகுதிக்கு அடவுப்பொருள் தொடர்பான அடகுப் பற்றுச்சீட்டின் அடியிதழைத் தனதுடைமையில் வைத்திருத்தல் வேண்டும்.

*தீ, இயற்கைப் பேரழிவு அல்லது வேறேதேனும் விளைவின் மூலம் அடவுப்பொருள் காணாமற்போகும் விடயத்தில் அடகுபிடிப்பவரின் பொறுப்பு.*

**30.** (1) அடவுப்பொருளொன்று தீ, இயற்கைப் பேரழிவு அல்லது வேறேதேனும் விளைவினால் அல்லது அதன் காரணமாக அல்லது வேறேதேனும் விளைவு காரணமாக காணாமற்போகுமிடத்து அல்லது அழிக்கப்படுமிடத்து அல்லது சேதமடைமிடத்து, அடகு பிடிப்பவர், கடன் மற்றும் வட்டித்தொகையையும் அத்தகைய கடன்தொடர்பில் செலுத்தப்படற்பாலதான தொழில் மொத்த விற்பனை வரவு வரி ஏதேனுமிருப்பின் அதனையும் கழித்த பின்னர், அடவுப்பொருளின் பெறுமதியைச் செலுத்துவதற்கு மீட்புக் காலப்பகுதியினுள் கோரிக்கையின்மீது பொறுப்பாதல் வேண்டும்.

(2) அடகு பிடிப்பவர் ஒவ்வொருவரும், அடகு வைக்கப்பட்ட பொருட்களின் பெறுமதியினது முழு அளவுக்கும் தமது தொழிலைக் காப்புறுதிசெய்துகொள்ளுதல் வேண்டும்.

(3) ஒவ்வோர் அடகு பிடிப்பவரும், அடகு வைக்கப்பட்ட பொருட்களைக் காப்பான முறையில் களஞ்சியப்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும.

*அடகு பிடிப்போரினால் கொடுத்துதவப்பட்ட பிணைப்பொறுப்பைத் திருப்பிக்கொடுத்தல்.*

**31.** முப்பதாம் பிரிவில் தரப்பட்டுள்ள ஏதேனும் சூழ்நிலையில் அல்லது ஆளொருவர் அடகு பிடிப்பவர் தொழிலைக்கொண்டு நடாத்தாதொழியுமிடத்து, அவரினால் கொடுத்துதவப்பட்ட பிணைப்பொறுப்பின் தொகை, அத்தகைய நட்டஈட்டைக் கொடுப்பனவு செய்வதற்கு அதிலிருந்து பயன்படுத்தப்பட்ட ஏதேனும் பணத்தொகையைக் கழித்து, அவருக்குத் திருப்பிக் கொடுக்கப்படுதல் வேண்டும்.

*அடகு பிடிப்பவரின் பற்றுச்சீட்டு.*

**32.** அடகு பிடிப்பவர் ஒவ்வொருவரும், அடவுப்பொருளை மீட்கும் நேரத்தில், அவருக்குச் செலுத்தப்பட்ட கடன் மற்றும் வட்டித்தொகைக்காகவும் அவரினால் அறவிடப்பட்ட வரிகள் எவையேனுமிருப்பின் அவற்றுக்காகவும் பற்றுச்சீட்டொன்றை வழங்குதல் வேண்டுமென்பதுடன், அடவுப்பொருள் புத்தகத்துடன் அத்தகைய பற்றுச்சீட்டின் பிரதியைப் பேணிக்காத்தலும் வேண்டும். அத்தகைய பற்றுச்சீட்டு,

அட்டவணை - I இல் தரப்பட்டுள்ள படிவம் “எ” இலிருத்தல் வேண்டும்.

*அடைவுப்பொருட்கள் ஏலவிற்பனை மூலம் விற்பனை செய்யப்படுதல்.*

**33.** (1) மீட்புக் காலப்பகுதியினுள் மீட்கப்படாத ஒவ்வோர் அடவுப்பொருளும், பகிரங்க ஏலவிற்பனை மூலமும் அட்டவணை - III இலுள்ள ஒழுங்குவிதிகள் மூலமும் கையுதிர்க்கப்படலாம்.

(2) அடவுப்பொருளொன்று பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளவிடத்து, அடகு பிடிப்பவர், அத்தகை விற்பனைக்காக நிர்ணயிக்கப்பட்ட திகதி மற்றும் நேரம் அத்துடன் அத்தகைய விற்பனை நடைபெறவுள்ள இடம் பற்றி மாகாண அரசிறை ஆணையாளருக்கு எழுத்தில் அறுபது நாட்களைக் கொண்ட எழுத்திலான அறிவித்தலைக் கொடுத்தல் வேண்டும். மாகாண அரசிறை ஆணையாளர், தமது முடிபை அத்தகைய விற்பனைக்கு இருபத்தொரு நாட்களுக்கு முன்னர் அடகு பிடிப்பவருக்கு அறிவித்தல் வேண்டும்.

(3) அடகு பிடிப்பவரின் அடவுப்பொருள் விற்பனை செய்யப்படவுள்ளவிடத்து, விற்பனைக்குப் பதினான்கு நாட்களுக்கு முன்னர் அடகு வைப்பவருக்குப் பதிவஞ்சல் மூலம் அறிவிக்கப்படுதல் வேண்டும்.

*கடன், வட்டி மற்றும் தொழில் மொத்த விற்பனை வரவு வரியின் தொகைக்கு மேலாக அடைவுப் பொருளின் விற்பனையின் மீதான நடவடிக்கைமுறை.*

**34.** (1) கடன்தொகைக்கும் விற்பனை திகதியன்று வருமதியான வட்டிக்கும், அத்தகைய கடன்தொடர்பில் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் வரிக்கும் மேலானவொரு பணத்தொகைக்காக அடவுப்பொருளொன்று விற்பனை செய்யப்படுமிடத்து, அடகு பிடிப்பவர் -

(அ) அத்தகைய அடவுப்பொருள், அவ்வடவுப் பொருள் எத்தொகைக்கு விற்பனை செய்யப்பட்டதோ அத்தொகை மற்றும் விற்பனையின் அவசியமான செலவு தொகைகளையும் விதிப்பனவுகளையும் கழித்த பின்னர் அடகு வைத்தரின் வரவுக்கிருக்கும் தொகை என்பவற்றை அடகு வைத்தவருக்கு அறிவித்தல் வேண்டும் ;

(ஆ) அத்தகைய விற்பனைத் திகதியிலிருந்து ஓராண்டினுள் செய்யப்பட்ட கோரிக்கையின்மேல், அடகு வைத்தவரின் வரவுக்கிருக்கும் தொகையை அவ்வடவுப்பொருள் தொடர்பான அடகுப் பற்றுச்சீட்டின் மூல இதழை வைத்திருப்பவருக்குச் செலுத்துதல் வேண்டும் ; அத்துடன்

(இ) அத்தகைய விற்பனைத் திகதியிலிருந்து ஓராண்டு காலப்பகுதியினுள் அத்தகைய கோரிக்கையெதுவும் செய்யப்படாவிடின், அடகு வைத்தவரின் வரவுக்கிருக்கும் அத்தகைய பணத்தொகையை மாகாண அரசிறை ஆணையாளரின் வைப்பிலிடுதல் வேண்டும்.

(2) மாகாண அரசிறை ஆணையாளரிடம் பணம் வைப்பிலிடப்பட்ட பின்னர் உடனடியாக அடகு வைத்தவருக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(3) விற்பனைத் திகதியிலிருந்து இரண்டாண்டு காலப்பகுதியினுள் அடகு வைத்தவர் மாகாண அரசிறை ஆணையாளருக்குக் கோரிக்கை செய்யுமிடத்து, பின்னையவர், அடகு ப் பற்றுச்சீட்டின் மூல இதழை வைத்திருப்பவருக்கு முப்பது நாட்களைக் கொண்ட காலப்பகுதியினுள் அத்தகைய தொகையைச் செலுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவின் கீழ் அத்தகைய கோரிக்கையெதுவும் இரண்டாண்டு காலப்பகுதியினுள் செய்யப்படாதவிடத்து, அத்தகைய பணத்தொகை (இதனகத்துப்பின்னர் "நிதியம்" என குறிப்பீடுசெய்யப்படும்) வடமத்திய மாகாணசபை நிதியத்துக்குக் கைமாற்றப்படுதல் வேண்டும்.

(5) விற்பனைத் திகதியிலிருந்து இரண்டாண்டு காலப்பகுதி முடிவுறுவதன்மேல் கோரிக்கையெதுவும் ஏற்றுக் கவனிக்கப்படுதலாகாது.

அடகு பிடிப்பவரினால் அடவுப்பொருட்கள் கொள்வனவு செய்யப் படுதல்.

**35.** அடகு பிடிப்பவர், ஏலவிற்பனையில், அவரிடம் அடகு வைக்கப்பட்ட அடவுப்பொருளுக்காக விலைகூறி அதனைக் கொள்வனவு செய்யலாமென்பதுடன், அத்தகைய கொள்வனவின்மீது, கொள்வனவு செய்யப்பட்ட அத்தகைய அடவுப்பொருளின் தனிச் சொந்தக்காரராக அவர் கருதப்படுதலும் வேண்டும்.

பாகம் IV

**சோதனையும், பரிசோதனையும், கைப்பற்றுகையும்**

தொழிலைச் சோதனையிடுதல்.

**36.** மாகாண அரசிறை ஆணையாளர் அல்லது மாகாணப் பிரதி அரசிறை ஆணையாளர் அல்லது மாகாண அரசிறை ஆணையாளரினால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட மதிப்பீட்டாளர், அடகு பிடிப்பவரினது தொழிலின் கணக்குகளைச் சோதனையிடுவதற்கு அதிகாரங் கொண்டிருத்தல் வேண்டும்.

விற்பனைப் புத்தகத்தைச் சோதனையிடுவதற்கான தத்துவம்.

**37.** நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அடைவுப்பொருளொன்று விற்பனை செய்யப்பட்ட திகதியிலிருந்து இரண்டாண்டுகளினுள் எந்நேரத்திலும், அடகு ப்பற்றுச்சீட்டின் மூல இதழை வைத்திருப்பவர், அடகு பிடிப்பவரின் புத்தகத்திலுள்ள அல்லது ஏலவிற்பனையாளரினால் மெய்யென்றுறுதிப்படுத்தப்பட்ட ஏலவிற்பனை பற்றிய தகவலைக் கொண்டுள்ள பட்டியலிலுள்ள விற்பனைப் பதிவுகளைச் சோதனையிடலாம். அடகு ப் பற்றுச்சீட்டின் மூல இதழை வைத்திருப்பவரை, அத்தகைய புத்தகத்திலுள்ள அல்லது பட்டியலிலுள்ள விற்பனை பற்றிய பதிவுகளைச் சோதனையிடுவதற்கு அடகு பிடிப்பவர் அனுமதித்தல் வேண்டும்.

அடகிற்குப் பொருட்களை முனைகின்ற ஆட்கள் தம்மைப் பற்றி சரியான விபரங்களைக் கொடுக்காதவிடத்து எடுக்கப்படும் நடவடிக்கைகள்.

**38.** (அ) அடகு என்ற வகையாகப் பொருளொன்றை அடகு பிடிப்பவரொருவருக்கு முனைகின்ற எவரேனுமாள், தேசிய அடையாள அட்டையை, கடவுச் சீட்டை அல்லது சாரதி உரிமத்தைக் காண்பிக்க மறுக்குமிடத்து அல்லது இயலாதவராகவுள்ளவிடத்து ; அல்லது

(ஆ) அடகு என்ற வகையாகப் பொருளொன்றை அடகு பிடிப்பவரொருவருக்கு முனைகின்ற எவரேனுமாள், அவர் அதனை உடைமைகொண்ட வழிவகைகள் பற்றித் திருப்திகரமான விபரமொன்றை வழங்க மறுக்குமிடத்து அல்லது இயலாதவராகவுள்ளவிடத்து ; அல்லது

(இ) அடகு பிடிப்பவருக்கு வேண்டுமென்று பொய்யான தகவலை எவரேனுமாள் கொடுக்குமிடத்து ; அல்லது

(ஈ) அடவுப்பொருளை மீட்பதற்கு உரித்துடையவராகவிராமல் ஓர் அடவுப் பொருளை மீட்பதற்கு எவரேனுமாள் எத்தனிக்கின்றவிடத்தும் முயற்சிக்கின்றவிடத்தும் ; அல்லது

(உ) பொருளொன்றை அடகு பிடிப்பவருக்கு அடகு என்ற வகையாக எவரேனுமாள் முனைகின்றவிடத்தும் அது களவாடப்பட்டது அல்லது வேறுவகையில் சட்டவிரோதமாகப் பெறப்பட்டுள்ளது எனச் சந்தேகிப்பதற்கு அடகு பிடிப்பவருக்குக் காரணமுள்ளவிடத்தும்,

அடகு பிடிப்பவர் மிகக்கிட்டிய பொலிஸ் நிலையத்துக்கு அத்தகைய நிகழ்வை அறிவிக்கலாம்.

*அடகு பிடிப்பவரின் கடையை அல்லது வதிவிடத்தைத் தேடுகையிடுவதற்கான தத்துவம்.*

**39.** (1) மாகாண அரசிறை ஆணையாளரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் நாளின் எந்நேரத்திலும் எவரேனும் அடகு பிடிப்பவரின் கடையினுள் அல்லது தொழிலிடத்தினுள் அல்லது வதிவிடத்தினுள் பிரவேசித்து, அடகு பிடிப்பவரிடம் அடகு வைக்கப்பட்ட ஏதேனும் பொருளை அல்லது அவரினால் பேணப்பட்ட எவையேனும் புத்தகங்களையும் ஆவணங்களையும் பரிசோதனை செய்து அவற்றைக் கவனத்துட்கொள்ளுதல் அவருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும். பொலிசாரின் உதவி அவசியமானதென மாகாண அரசிறை ஆணையாளர் அபிப்பிராயப்படின், அவ்வாறு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருடன் அல்லது அலுவலர்களுடன் சேர்ந்து பொலிசு அலுவலர் ஒருவர் செல்லலாம்.

(2) அத்தகைய எவரேனும் அலுவலர் அத்தகைய கடமைகளை நிறைவேற்றுகையில் ஆளெவரும் அவரை எதிர்த்தலாகாது.

பாகம் V

**தவறுகளும் தண்டனைகளும்**

*அடகு வைப்போரினாலும் ஏனைய ஆட்களினாலும் புரியப்படும் தவறுகள்.*

**40.** (அ) அடகு என்ற வகையாகப் பொருளொன்றை அடகு பிடிப்பவருக்கு முனைகின்றவரும், ஆனால் அத்தகைய பொருளை அவர் எந்த வழிவகைகள் மூலம் உடைமைகொண்டாரென்பது பற்றித் திருப்திகரமான விபரத்தைக் கொடுப்பதற்கு மறுக்கின்றவரும் அல்லது இயலாதவரும் ; அல்லது

(ஆ) சட்டமுறையான சாக்கின்றி, இன்னோராளின் ஏதேனும் பொருளை அடகு பிடிப்பவரிடம் அடகு வைக்கின்றவரும் ; அல்லது

(இ) அடைவுப்பொருளொன்றை மீட்பதற்கு உரித்துடையவரான ஆளாகவிராமல் அத்தகைய அடைவுப்பொருளை மீட்பதற்கு எத்தனிக்கின்றவரும் அல்லது முயற்சிக்கின்றவரும் ; அல்லது

(ஈ) நியதிச்சட்டத்தின்கீழ் பொய்யான வெளிப்படுத்துகையைச் செய்கின்றவரும் ; அல்லது

(உ) நியதிச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டை மீறுகின்றவரும் அல்லது நியதிச்சட்டத்தினால் அவர் எதனைச் செய்வதற்குத் தேவைப்படுத்தப்படுகின்றாரோ அதனைச் செய்யத் தவறுகின்றவரும்,

ஆன ஆள் ஒவ்வொருவரும் தவறொன்றைப் புரிகின்றவராதல் வேண்டும்.

*அடகு பிடிப்போரினாலான தவறுகள்.*

**41.** (அ) பதினெட்டு வயதுக்குக் குறைந்தவராகக் காணப்படுகின்ற எவரேனுமாளிடமிருந்து பொருளொன்றை அடகாக ஏற்றுக்கொள்கின்றவரான ;

(ஆ) அடகுப் பற்றுச்சீட்டின் மூல இதழைக் கொடுக்காமல் பொருளொன்றை அடகாக ஏற்றுக் கொள்கின்றவரான ;

(இ) இன்னோர் அடகு பிடிப்பவரினால் வழங்கப்பட்ட அடகுப் பற்றுச்சீட்டின் மூல இதழைக் கொள்வனவு செய்கின்றவரான அல்லது அடகாக அல்லது பரிமாற்றாக எடுக்கின்றவாறான ;

(ஈ) பொருளொன்றை அடகு ஆக ஏற்றுக்கொள்வதற்குப் பதினெட்டு வயதுக்குக் குறைந்த எவரேனும் சேவையாளரைத் தொழிலுக்கமர்த்துகின்றவரான ;

(உ) நியதிச்சட்டத்தின்கீழான பகிரங்க ஏல விற்பனையிலல்லாது, அவரிடம் அடகிலுள்ள போது ஏதேனும் அடகுப் பொருளைக் கொள்வனவு செய்கின்றவரான ;

(ஊ) ஏதேனும் அடைவுப்பொருள் அவரிடம் அடகிலிருக்கையில், அதனைக் கொள்வனவு செய்யும் நோக்குடன் அதனை மீட்பதற்கு முனைகின்றவரான ;

(எ) ஏதேனும் பொருளை அடகு வைக்கின்ற அல்லது அடகு வைக்க முனைகின்ற எவரேனுமாளுடன், மீட்புக் காலப்பகுதியினுள் அத்தகைய பொருளைக் கொள்வனவு செய்வதற்கு, விற்பனை செய்வதற்கு அல்லது கையுதிர்ப்பதற்கு உடன்படுகின்றவரான ;

(ஏ) நிதியதிச்சட்டத்தினால் அதிகாரமளிக்கப்படுகின்றவாறான அத்தகைய நேரத்திலும் அத்தகைய முறையிலும் தவிர, அவரிடம் அடகு வைக்கப்பட்ட ஏதேனும் அடகுப் பொருளை விற்பனை செய்கின்றவாறான அல்லது வேறுவகையில் கையுதிர்க்கின்றவரான ;

(ஐ) நியதிச்சட்டத்தின்கீழ் அவரினால் வைத்திருக்கப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் புத்தகத்தில் ஏதேனும் பொய்யான பதிவைச் செய்கின்றவரான அல்லது நியதிச்சட்டத்தினால் அதன்கண் செய்வதற்கு அவர் தேவைப்படுத்தப்படுகின்ற ஏதேனும் பதிவைச் செய்வதற்குத் தவறுகின்றவரான ;

(ஒ) அவரிடம் அடகு வைக்கப்பட்ட எல்லாப் பொருட்களினதும் பெறுமதியின் முழு அளவுக்குத் தமது தொழிலைக் காப்புறுதி செய்துவைப்பதற்குத் தவறுகின்றவரான ;

(ஓ) நியதிச்சட்டத்தின் எவையேனும் ஏற்பாடுகளை மீறுகின்றவரான அல்லது நியதிச்சட்டத்தினால் செய்வதற்கு அவர் தேவைப்படுத்தப்பட்ட எதனையும் செய்வதற்குத் தவறுகின்றவரான ; அல்லது

(ஔ) நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் மாகாண அரசிறை ஆணையாளருக்கு வருடாந்த கணக்குகள் பற்றிய கூற்றை அளிப்பதற்குத் தவறுகின்றவரான,

அடகு பிடிப்பவர் ஒவ்வொருவரும் தவறொன்றைப் புரிகின்றவராதல் வேண்டும்.

ஏதேனும் துணி, உடு துணிகள், செய்து முடிக்காத பண்டங்கள் முதலியவற்றை அடகாக எடுத்தல்.

**42.** (1) கழுவுவதற்கு, சுத்திகரிப்பதற்கு, அழுத்துவதற்கு, சீர்படுத்துவதற்கு, உற்பத்தி செய்வதற்கு, செப்பனிடுவதற்கு, செய்து முடிப்பதற்கு அல்லது அலங்கரிப்பதற்கு எவரேனுமாளுக்குப் பொறுப்பிக்கப்பட்ட ஏதேனும் துணியை, உடைகளை, செய்து முடிக்காத பண்டங்களை அல்லது பொருட்களை அறிந்துகொண்டு ஏற்றுக்கொள்கின்ற ஒவ்வோர் அடகு பிடிப்பவரும் தவறொன்றைப் புரிகின்றவராதல் வேண்டும்.

(2) இப்பிரிவின்கீழான தவறொன்றுக்கு ஏதேனும் நீதிமன்றம் எவரேனும் அடகு பிடிப்பவருக்குக் குற்றத்தீர்ப்பளிக்குமிடத்து, நீதிமன்றம், அத்தவறுக்காக அத்தகைய நீதிமன்றம் விதிக்கக் கூடிய வேறேதேனும் தண்டனையுடன் சேர்த்து மேலதிகமாக நீதிமன்றத்தின் முன்னிலையில் அல்லது நீதிமன்றம் பணிக்கின்ற வாறான வேறேதேனும் முறையில் அடைவுப் பொருளின் சொந்தக்காரருக்கு அதனை மீட்டளிக்கும்படி அடகு பிடிப்பவருக்குக் கட்டளையிடலாம்.

அடகு வைப்பவரின் வரவுக்கிருக்கும் தொகையை வைப்பிலிடுவதற்கு அடகு பிடிப்பவர் தவறுதல்.

**43.** முப்பத்து நான்காம் பிரிவினால் தேவைப்படுத்தப்பட்டவாறு ஓர் அடகு வைப்பவரின் வரவுக்கிருக்கும் தொகையை மாகாண அரசிறை ஆணையாளரிடம் வைப்பிலிடுவதற்குத் தவறுகின்ற அடகு பிடிப்பவர் ஒவ்வொருவரும் தவறொன்றைப் புரிகின்றவராதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய தவறுக்காக ஏதேனும் நீதிமன்றம் எவரேனும் அடகு பிடிப்பவருக்குக் குற்றத்தீர்ப்பளிக்குமிடத்து, நீதிமன்றம், அத்தவறுக்காக அது விதிக்கக்கூடிய வேறேதேனும் தண்டனையுடன் சேர்த்து மேலதிகமாக, நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட குற்றப்பணமென்றாற்போன்று அத்தகைய தொகைக்குச் சமமானவொரு பணத்தொகையை அடகு பிடிப்பவரிடமிருந்து அறவிடும்படி கட்டளையிடலாம். அத்தகைய ஒவ்வொரு பணத்தொகையும் நீதிமன்றத்தினால் அறவிடப்படும்போது, நிதியத்தில் வைப்பலிடப்படுதல் வேண்டும்.

**44.** அடகு பிடிப்பவர் தொழிலின்போது அல்லது அத்தொழில் தொடர்பாக அடகு பிடிப்பவரின் சேவையாளரினால் அல்லது முகவரினால் செய்யப்பட்ட அல்லது செய்யாதுவிடப்பட்ட எதுவும், விடயத்துக்கேற்ப, அடகு பிடிப்பவரினால் செய்யப்பட்டதாக அல்லது செய்யாதுவிடப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும். அடகு பிடிப்பவரின் சேவையாளரினாலான அல்லது முகவரினாலான தவறுகள்.

ஆயின், எவ்வாறாயினும், அடகு பிடிப்பவர் கடையில் அல்லது தொழிலிடத்தில் இல்லாதிருக்கையில் நியதிச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டுக்கு முரணாக அடகு பிடிப்பவரின் சேவையாளரினால் அல்லது முகவரினால் எதுவும் செய்யப்படுமிடத்து அல்லது செய்யாது விடப்படுமிடத்து, அத்தகைய சேவையாளர் அல்லது முகவர் தவறொன்றைப் புரிகின்றவராதல் வேண்டும்.

**45.** (1) நியதிச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிகின்றவராகவுள்ள ஆளொவ்வொருவரும் இரண்டு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஆறு மாதங்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும். தண்டம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்டு சேகரிக்கப்பட்ட குற்றப்பணம், நிதியத்துக்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

**46.** அடகு பிடிப்பவரொருவர் பொருளொன்றைச் சட்டவிரோதமாக உடைமைகொண்டுள்ளாரென நியதிச்சட்டத்தின்கீழ் கோப்பிடப்பட்ட ஏதேனும் வழக்கு நடவடிக்கையில் நீதிமன்றத்துக்கு அறிக்கையிடப்படும் போதெல்லாம், நீதிமன்றம் முறையானவையெனக் கருதக்கூடியவாறான அத்தகைய நியதிகள் எவையேனுமிருப்பின் அவற்றின்கீழ் அப்பொருள் காண்பிக்கப்படும்படியும் அத்தகைய நீதிமன்றத்தினால் பெயர் குறிப்பிடப்பட்ட எவரேனுமாளுக்கு அது ஒப்படைக்கப்படும்படியும் கட்டளையிடுவதற்கு அத்தகைய நீதிமன்றம் தகுதிவாய்ந்ததாதல் வேண்டும். அடகு பிடிப்பவரினால் சட்ட விரோதமாக உடைமை கொள்ளப்பட்ட பொருட்கள்.

பாகம் VI

## பொது ஏற்பாடுகள்

**47.** (1) அடகு பிடிப்பவர் தொழில், அவர் இறப்பதன் மேல், நியதிச்சட்டத்தின் 4 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, 6 ஆம் பிரிவின் கீழ் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஆளுக்கு மாற்றமளிக்கப்படுதல் வேண்டும். பெயர் நியமனம்.

(2) பெயர்குறித்துநியமிக்கப்பட்ட ஆள் அடகு பிடிப்பவருக்கு முன்னர் இறக்குமிடத்தும் அத்தகைய அடகு பிடிப்பவரினால் ஆளெவரும் பெயர் குறித்து நியமிக்கப்பட்டிராதவிடத்தும், அத்தகைய அடகு பிடிப்பவர் இறப்பதன்மேல், மாகாண அரசிறை ஆணையாளர், அத்தகைய அடகு பிடிப்பவரின் தொழிலை ஒழித்துக்கட்டுவதற்கு ஆளொருவரை நியமித்தல் வேண்டும்.

(3) (அ) ஏதேனும் இயலாமை அல்லது வேறு ஏதேனும் காரணத்துக்காக அடகு பிடிப்பவர் தமது தொழிலைக் கொண்டு நடாத்துவதற்கு இயலாதவராகவுள்ளவிடத்து, அத்தகைய அடகு பிடிப்பவர் ஆளொருவரைப் பெயர் குறித்து நியமிக்கலாம். அத்தகைய பெயர் நியமனம், 4 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய செய்யப்படுதல் வேண்டும்.

(ஆ) மாகாண அரசிறை ஆணையாளர் அத்தகைய நியமத்தரைப் பதிவுசெய்யலாம்.

(4) உட்பிரிவு (1) அல்லது (3) இன்கீழ் அடகு பிடிப்பவர் தொழில் மாற்றமளிக்கப்படுமிடத்து, மாகாண அரசிறை ஆணையாளர், திருப்திப்படுவதன்மேல், சொத்துக்களும் பொறுப்புக்களும் எந்த நியமத்தருக்கு மாற்றமளிக்கப்பட்டுள்ளனவோ அத்தகைய நியமத்தருக்கு உரிமமொன்றை வழங்குதல் வேண்டும்.

(5) அடகு பிடிப்பவர் தொழில் பங்காண்மை மூலம் கொண்டு நடாத்தப்படவுள்ளவிடத்து, அத்தகைய தொழிலை ஒழித்துக் கட்டும் விடயத்தில், அடகு வைப்போரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான அத்தகைய ஏற்பாடுகளைப் பங்காண்மை உடன்படிக்கை கொண்டிருத்தல் வேண்டும்.

அடகுபிடிப்பவர் தொழிலை மாற்றளித்தல்.

**48.** (1) எவரேனும் அடகு பிடிப்பவர், அவரது அடகு பிடிப்பவர் தொழிலை மாற்றளிப்பதற்கு உட்கருதுமிடத்து, அத்தகைய அடகு பிடிப்பவர் பின்வருவனவற்றுடன் சேர்த்து மாகாண அரசிறை ஆணையாளருக்கு எழுத்திலான கோரிக்கையைச் செய்தல் வேண்டும் :-

(அ) (இதனகத்துப்பின்னர் "மாற்றளிக்கப்பட்டவர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) எந்த ஆளுக்கு அத்தகைய தொழில் மாற்றளிக்கப்படுவதற்கு உட்கருதப்படுகின்றதோ அந்த ஆள் வதிகின்ற இடத்தில் அமைந்துள்ள பொலிஸ் நிலையத்துக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலரிடமிருந்து அவருக்கெதிராக முறைப்பாடுகள் எவையுமில்லையென்ற பயன்படப் பெறப்பட்ட சான்றிதழ் ;

(ஆ) அடகு பிடிப்பவருக்கும் மாற்றளிக்கப்பட்டவருக்கும் எதிராக நீதிமன்றத்தில் குற்றவியல் வழக்கு நடவடிக்கையெதுவுமில்லையென்ற பயன்பட்ட சத்தியக்கடதாசி ; அத்துடன்

(இ) மீட்கப்படவுள்ள எல்லா அடவுப் பொருட்களும் தொடர்பிலான எல்லாத் தகவல்களும் அவசியமான வேறேதேனும் தகவலும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் கோரிக்கையைச் செய்துள்ள அடகு பிடிப்பவர், அத்தகைய கோரிக்கைத் திகதியிலிருந்து ஏதேனும் பொருளை அடகு ஆக ஏற்றுக்கொள்ளுதலாகாது.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட கோரிக்கையின்மேல், அத்தகைய அடகு பிடிப்பவர், ஒரு வார காலப்பகுதியினுள், சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளிலான நாளாந்தச் செய்தித் தாளொன்றில் மாற்றளிக்கப்பட்டவரின் பெயர், முகவரி மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கம் என்பவற்றைக் கொண்டுள்ள அறிவித்தலொன்றை வெளியிடுதல் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட அறிவித்தல், தொழிலிடத்தின் துலாம்பரமானவொரு பாகத்தில் ஒட்டப்படுதல் வேண்டும்.

(5) மாகாண அரசிறை ஆணையாளர், திருப்திப்படுவதன்மேல், மாற்றளிக்கப்பட்டவருக்கு உரிமமொன்றை வழங்குதல் வேண்டும்.

அடகுபிடிப்பவர் தொழிலை ஒழித்துக்கட்டுதல்.

**49.** (1) எவரேனும் அடகு பிடிப்பவர் தமது அடகு பிடிப்பவர் தொழிலை ஒழித்துக்கட்டுவதற்கு உட்கருதுமிடத்து, அத்தகைய அடகு பிடிப்பவர் பின்வருவனவற்றுடன் சேர்த்து அவரது உட்கருத்தை மாகாண அரசிறை ஆணையாளருக்கு அறிவித்தல் வேண்டும் :-

(அ) தொழிலிடம் அமைந்துள்ள இடத்திலுள்ள பொலிசு நிலையத்துக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலரிடமிருந்தும், அடகு பிடிப்பவர் வதிகின்ற இடத்திலுள்ள பொலிசு நிலையத்துக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலரிடமிருந்தும் அவருக்கெதிராக முறைப்பாடுகள் எவையுமில்லையென்ற பயன்படப் பெறப்பட்ட சான்றிதழ் ;

(ஆ) அவருக்கெதிராக நீதிமன்றத்தில் குற்றவியல் வழக்கு நடவடிக்கையெதுவுமில்லையென்ற பயன்பட்ட சத்தியக்கடதாசி ; அத்துடன்

(இ) மீட்கப்படவுள்ள எல்லா அடைவுப்பொருட்களும் தொடர்பிலான எல்லாத் தகவல்களும் அவசியமான வேறேதேனும் தகவலும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட அடகு பிடிப்பவர், மாகாண அரசிறை ஆணையாளருடனான அத்தகைய தொடர்பாடல் திகதியிலிருந்து எவையேனும் பொருட்களை அடகு ஆக ஏற்றுக்கொள்ளுதலாகாது.

(3) ஓராம் உட்பிரிவின் கீழ் அறிவிக்கப்பட்ட தொடர்பாடலின்மீது அத்தகைய அடகு பிடிப்பவர், ஒரு வார காலப்பகுதியினுள், சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளிலான நாளாந்தச் செய்தித்தாளொன்றில் அடகு பிடிப்பவரின் பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் உரிம இலக்கம் அத்துடன் அடகு பிடிப்பவர் தொழிலை ஒழித்துக்கட்டுவதற்கான உட்கருத்து என்பவற்றைக் கொண்டுள்ள அறிவித்தலொன்றை வெளியிடுதல் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட அறிவித்தல், தொழிலிடத்தின் துலாம்பரமானவொரு பாகத்தில் ஒட்டப்படுதல் வேண்டும்.

(5) மகாாண அரசிறை ஆணையாளர், எந்த அலுவலரின் மேற்பார்வையின்கீழ் அத்தகைய ஒழித்துக்கட்டுகை இடம்பெற வேண்டுமோ அந்த அலுவலரைப் பெயர் குறித்து நியமித்தல் வேண்டும்.

கொடுப்பனவிலான தவணை தவறுகை

**50.** நியதிச்சட்டத்தின் நியதிகளின் கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின் கீழ் பிணைப் பொறுப்பாக வைப்பொன்றைக் கொடுத்துதவும்படி தேவைப்படுத்தப்படுகின்ற எவரேனும் அடகு பிடிப்பவர் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் அவ்வாறு செய்வதற்குத் தவறுமிடத்து, அத்தகைய தொகை, அத்தகைய அடகு பிடிப்பவர் செலுத்துவதற்கு ஆளாகவுள்ள கொடுப்பனவிலான தவணைதவறுகையாகக் கருதப்படுதல் வேண்டும்.

தவணை தவறுகையிலுள்ள அடகு பிடிப்பவருக்கான அறிவித்தல்.

**51.** (1) நியதிச்சட்டத்தின்கீழ் அடகு பிடிப்பவர் எந்தப் பணத்தொகையைச் செலுத்துவதற்கு ஆளாகவுள்ளாரோ அந்த ஏதேனும் பணத்தொகையின் கொடுப்பனவில் அவர் தவணை தவறுமிடத்து, மாகாண அரசிறை ஆணையாளர், இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் தவணை தவறுகையிலுள்ள ஏதேனும் பணத்தொகையை அறவிடுவதற்கான வழக்கு நடவடிக்கைகளை எடுக்கு முன்னர், அட்டவணை IV இல் தரப்பட்டுள்ள படிவம் “ஆ” இலுள்ள தேவைப்பட்ட விபரங்களுடன் சோத்து, அட்டவணை IV இல் தரப்பட்டுள்ள படிவம் “அ” இலுள்ள அறிவித்தலை வழங்குதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அறிவித்தலைப் பெறுகின்ற எவரேனும் அடகு பிடிப்பவர், (1) ஆம் உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அறிவித்தலிலிருந்து பதினான்கு நாட்களினுள் அத்தகைய பணத்தொகையின் கொடுப்பனவுக்கெதிராக ஆட்சேபனை தெரிவிக்கலாமென்பதுடன், மாகாண அரசிறை ஆணையாளர் அத்தகைய ஆட்சேபனையைக் கவனத்துட்கொண்டு இறுதியானதாகவிருக்கவேண்டிய அதன்மீதான அவரது முடிபைக் கொடுத்தலும் வேண்டும் ;

ஆயின், சுகவீனம் அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறு நியாயமான காரணத்துக்காக (1) ஆம் உட்பிரிவின்கீழான தவணைதவறியவர், அறிவித்தல் வழங்கப்பட்டதிலிருந்து பதினான்கு நாட்களினுள் செயலாற்ற இயலாதவராகவிருந்தாரென மாகாண அரசிறை ஆணையாளர் திருப்பதிப்படுமிடத்து, காலநீடிப்பொன்று அவருக்கு வழங்கப்படுதல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழான அறிவித்தலிலிருந்து அல்லது முடிபிலிருந்து பதினான்கு நாட்கள் கழிந்ததன் மேல், அத்தகைய அடகு பிடிப்பவர் செலுத்துவதற்கு ஆளாகவுள்ள ஏதேனும் பணத்தொகையின் கொடுப்பனவில் அவர் தவணைதவறுமிடத்து, மாகாண அரசிறை ஆணையாளர், அட்டவணை IV இல் தரப்பட்டுள்ள படிவம் “இ” இலுள்ள அறிக்கையை அடகு பிடிப்பவருக்குச் சேர்ப்பிக்கப்பட்ட அறிவித்தலின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியுடனும் (1) ஆம் உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட விபரங்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியுடனும் சோத்து வழங்குதல் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவின்கீழ் கட்டளை அல்லது பணிப்பொன்று எந்த அடகு பிடிப்பவருக்கெதிராக வழங்கப்பட்டுள்ளதோ அந்த அடகு பிடிப்பவர் அத்தகைய கட்டளைக்கு அல்லது பணிப்புக்கு இணங்கியொழுகுவதற்குத் தவறியுள்ளவிடத்து, அத்தகைய அடகு பிடிப்பவர் தவறொன்றைப் புரிகின்றவராதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்கவிளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஓராண்டை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(5) திருத்தப்பட்டவாறான (68 ஆம் அத்தியாயமான) காலவிதிப்புக் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகள், பிணைப்பொறுப்பாகச் செலுத்தப்படற்பாலனவான எவையேனும் பணத்தொகைகளை அறவிடுவதற்கு ஏற்புடையனவாதலாகாது.

(6) இப்பிரிவில் “அடகு பிடிப்பவர்” என்பது, ஒரு கம்பனியின் அல்லது ஆட்கள் குழுவின் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணிப்பாளர் அல்லது பிரதான அலுவலர், அல்லது பங்காண்மையின் பங்காளர் அல்லது கூட்டிணைக்கப்படாத குழுவின் உறுப்பினர் அல்லது பதவி தாங்குநர் என்போரை உள்ளடக்குகின்றது.

*மாகாண அரசிறை ஆணையாளர் தகவலைத் தேவைப் படுத்தலாம்.*

**52.** (1) மாகாண அரசிறை ஆணையாளர், பின்வருமாறு செய்யும்படி எவரேனும் அடகு பிடிப்பவரை அல்லது அத்தகைய அடகு பிடிப்பவரின் எவரேனும் சேவையாளரை அல்லது முகவரைத் தேவைப் படுத்தலாம் :-

(அ) குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் குறித்துரைக்கப்பட்ட புத்தகங்களை, தரவுகளை, கணக்குகளை, வியாபார நிரல்களை, கையிருப்பு நிரல்களை, இடாப்புகளை, உறுதிச்சீட்டுகளை, காசோலைப் புத்தகங்களை, அடகு ப் பற்றுச்சீட்டுகளை, அடைவுப்பொருள் புத்தகங்களை, கணக்காய்வறிக்கைகளை அல்லது அத்தகைய அறிவித்தலிற் குறித்துரைக்கப்பட்ட வேறெவையேனும் ஆவணங்களைக் காண்பிக்கும்படியும் ;

(ஆ) அத்தகைய அடகு பிடிப்பவர் தொழில் தொடர்பான ஏதேனும் தகவலை வழங்கும்படியும் ;

(இ) ஏதேனும் கருமத்தை நுண்ணாய்வு செய்வதற்கு அறிவித்தலிற் குறிப்பிடப்பட்ட நேரத்திலும், திகதியிலும், இடத்திலும் தாமாகச் சமுகமளிக்கும்படியும் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவர் மூலம் பிரதி நிதித்துவப்படுத்தப்படும்படியும்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்ட தகவலைக் கொடுத்துதவும்படி அறிவித்தல் சேர்ப்பிக்கப்படும்போது, அத்தகைய பணிப்புக்கு இணங்கியொழுகுதல் அடகு பிடிப்பவரின் அல்லது அத்தகைய அடகு பிடிப்பவரின் எவரேனும் சேவையாளரின் அல்லது முகவரின் கடமையாதல் வேண்டும்.

(3) மாகாண அரசிறை ஆணையாளர், குறித்தவொரு காலப்பகுதிக்கு அத்தகைய புத்தகங்களை, தரவுகளை, கணக்குகளை, வியாபார நிரல்களை, கையிருப்பு நிரல்களை, இடாப்புகளை, உறுதிச்சீட்டுகளை, காசோலைப் புத்தகங்களை, அடகு ப் பற்றுச்சீட்டுகளை, அடைவுப்பொருள் புத்தகங்களை, கணக்காய்வறிக்கைகளை அல்லது வேறு ஆவணங்களை அவரது கட்டுக்காப்பினுள் எடுக்கலாம்.

*குற்றவழக்கு.*

**53.** நியதிச்சட்டத்தின்கீழான ஏதேனும் தவறுக்கான குற்றவழக்கெதுவும், மாகாண அரசிறை ஆணையாள ரினால் அல்லது எழுத்திலான அவரது வலுவளிப்புடன் தவிர, தொடுக்கப்படுதலாகாது.

*இரகசியம் பேணுதல்.*

**54.** (1) அடகு பிடிப்பவர் ஒவ்வொருவரும் அல்லது அத்தகைய அடகு பிடிப்பவர் தொழிலிலுள்ள அவரது சேவையாளர் அல்லது முகவர் மற்றும் அவரது பதவி அல்லது உத்தியோகம் காரணமாக அத்தகைய தொழிலின் பதிவேடுகள், தரவுகள், இடாப்புகள், கடிதத்தொடர்பு அல்லது வேறேதேனும் விடயத்துக்கு ஏதேனும் அணுக்கத்தையுடைய ஆள் ஒவ்வொருவரும், அதன் உள்ளீடுகள் தொடர்பாக முழுமையாக இரகசியம் பேணுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஆள் ஒவ்வொருவரும், பின்வரும் சூழ்நிலைகளில் ஒழிய, அத்தகைய தொழில் தொடர்பான ஏதேனும் தகவலை எவரேனும் தனியாளுக்கு, கூட்டுத்தாபனத்துக்கு, வங்கிக்கு, நீதிமன்றத்துக்கு, நிறுவனத்துக்கு, உருவகத்துக்கு, திணைக்களத்துக்கு, அலுவலருக்கு முகவருக்கு, இலங்கை அரசாங்கத்தின் பிரதிநிதிக்கு அல்லது வேறெவரேனும் ஆளுக்குக் கொடுத்தலோ, வெளிவிடுதலோ அல்லது வெளிப்படுத்துதலோ ஆகாது:-

(அ) அத்தகைய தொழிலின் அடகு பிடிப்பவர் அல்லது அத்தகைய பொருளை அடகு வைத்தவர் அவ்வாறு செய்வதற்குத் தமது அனுமதியை அளித்தாலொழியவும்;

(ஆ) அத்தகைய அடகு பிடிப்பவரினால் அல்லது அவருக்கெதிராக, அல்லது அடகு வைத்த வரினால் அல்லது அவருக்கெதிராகச் சட்ட வழக்கு நடவடிக்கைகள் தொடுக்கப்பட்டா லொழியவும் ; அல்லது

(இ) ஏதேனும் சட்ட ஏற்பாட்டினால் அவ்வாறு செய்யும்படி அவர் தேவைப்படுத்தப் பட்டாலொழியவும்.

*ஒழுங்குவிதிகள்.*

**55.** (1) (இதனகத்துப்பின்னர் ''அமைச்சர்'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட மாகாணத்தின் அமைச்சர், நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளை நிறைவேற்றும் அல்லது அவற்றுக்குப் பயன் கொடுக்கும் நோக்கத்துக்காக ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) ஒராம் உட்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றி, பின்வரும் எல்லாக் கருமங்களுக்காகவும் அல்லது அவற்றுள் எவற்றுக்காகவும் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்:-

(அ) நியதிச்சட்டத்தின்கீழ் எக்கருமங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுகின்றதோ அல்லது அதிகாரமளிக்கப்படுகின்றதோ அக்கருமங்கள் எல்லாம் ;

(ஆ) நியதிச்சட்டத்தின் கீழ் சமர்ப்பிக்கப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் அறிக்கையில் உள்ளடக்கப்பட வேண்டிய தகவல் ;

(இ) மாகாண அரசிறை ஆணையாளரினால் வைத்திருக்கப்பட்டுப் பேணப்படவேண்டிய புத்தகங்களும் இடாப்புகளும் அவற்றின்கண் பதியப்படவேண்டிய விபரங்களும் ;

(ஈ) அடகு பிடிப்பவர் தொழிலைக் கொண்டு நடாத்துவதற்கான பதிவுக்கட்டணங்கள் அத்துடன்;

(உ) உரிமம்பெறுநரினால் கொடுத்துதவப்படவேண்டிய கட்டணங்களும் பிணைப்பொறுப்பு வைப்பும், பிணைப் பொறுப்புக் கட்டணங்களை வைப்பிலிடுவதற்கான முறையும்.

(3) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் எல்லாம் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், (அத்தகைய வர்த்தமானி வெளியீட்டிலிருந்து மூன்று மாதங்களினுள்) வடமத்திய மாகாண சபையின் முன்னர் அங்கீகாரத்துக்காக இடப்படுதலும் வேண்டும்.

(4) வடமத்திய மாகாண சபையினால் அங்கீகரிக்கப்படாத ஒவ்வோர் ஒழுங்குவிதியும் அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட திகதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி ஒழிக்கப்பட்டு விட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) ஏதேனும் ஒழுங்குவிதி எத்திகதியன்று ஒழிக்கப்பட்டு விட்டதாகக் கருதப்படவேண்டுமோ அத்திகதி பற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

அடகு பிடிப்பவர் தொழிலைக் கொண்டு நடாத்துபவராகக் கருதப்படுதல்.

**56.** பண்டங்களைக் கொள்வனவு செய்து பெற்றுக்கொண்டு அல்லது ஏற்றுக்கொண்டு அல்லது வெளிப்படையான அல்லது உட்கிடையானவோர் உடன்படிக்கை அல்லது புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்கீழ் ஏதேனும் பணத்தொகையை அதன்மீது செலுத்துகின்ற அல்லது முற்பணமாகக் கொடுக்கின்ற அல்லது கடனாகக்கொடுக்கின்ற, அல்லது கொடுக்கல் வாங்கலின் தன்மையிலிருந்தும் இயல்பிலிருந்தும் அப்பண்டங்கள் எவையேனும் நிபந்தனையின்மீது மீட்கப்படலாம் அல்லது கொள்வனவு செய்யப்படலாம் என நியாயமான முறையில் ஊகிக்கப்படுகின்ற, அல்லது பண்டங்களைக் கொள்வனவு செய்வதற்காக அல்லது விற்பனை செய்வதற்காக அல்லது அவற்றின்மீது முற்பணமாகக் கொடுக்கப்பட்ட பணத்துக்கான பிணைப்பொறுப்பு என்றவகையில் பண்டங்களை ஏற்றுக்கொள்வதற்காகக் கடையொன்றைப் பேணுகின்ற எவரேனுமாள் அடகு த்தொழிலைக் கொண்டு நடாத்துபவராகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், மேலும், அத்தகைய ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலும், பொருளும், கடனும், நியதிச்சட்டத்தின் பொருளுக்குட்பட அடகு வைத்தல், அடைவுவைத்தல் மற்றும் கடன் ஒன்றாகக் கருதப்படுதலும் வேண்டும்.

பேணல்கள்.

**57.** (அ) நியதிச்சட்டம் ஆக்கப்பட்டமை எவ்வாறிருப்பினும், நியதிச்சட்டம் தொடங்கும் திகதியன்று வலுவிலுள்ளவாறு (இதனகத்துப்பின்னர் ''கட்டளைச்சட்டம்'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) திருத்தப்பட்டவாறான 1942 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, (90 ஆம் அத்தியாயமான) அடகு பிடிப்போர் கட்டளைச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்குவிதியும், அத்தகைய ஒழுங்குவிதி நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத அளவுக்கு இந்நியதிச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஒழுங்குவிதி நியதிச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதியினால் திருத்தப்படலாம், ஒழிக்கப்படலாம் அல்லது மாற்றப்படலாம்.

(ஆ) நியதிச்சட்டம் நடைமுறைக்குவரும் திகதிக்கு முற்போந்த நாளன்று மாகாணத்தினுள் கட்டளைச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின்கீழ் மாகாணத்தினுள் வழங்கப்பட்ட உரிமம் ஒவ்வொன்றும், நியதிச்சட்டம் நடைமுறைக்குவரும் திகதியிலிருந்து நியதிச்சட்டத்தின் 6 ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(இ) நியதிச்சட்டம் நடைமுறைக்குவரும் திகதிக்கு முற்போந்த நாளன்று மாகாணத்தினுள் கட்டளைச்சட்டத்தின் 23அ என்னும் பிரிவின்கீழ் அடகு பிடிப்பவரொருவரினால் கொடுத்துதவப்பட்ட எல்லாப் பிணைப்பொறுப்பும், நியதிச்சட்டம் நடைமுறைக்குவரும் திகதியிலிருந்து இந்நியதிச்சட்டத்தின் 7 ஆம் பிரிவின்கீழ் கொடுத்துதவப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(ஈ) மாகாணத்தினுள் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அடகு பிடிப்பவரினால் அல்லது அவருக்கெதிராகத் தொடுக்கப்பட்டவையும் நியதிச்சட்டம் நடைமுறைக்குவரும் திகதிக்கு முற்போந்த நாளன்று முடிவுறாதுள்ளவையுமான எல்லா வழக்குகளும் வழக்கு நடவடிக்கைகளும், நியதிச்சட்டம் நடைமுறைக்கு வரும் திகதியிலிருந்து நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் விடயத்துக்கேற்ப, அடகு பிடிப்பவரினால் அல்லது அவருக்கெதிராகத் தொடுக்கப்பட்ட வழக்குகளாகவும் வழக்கு நடவடிக்கைகளாகவும் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்கத் தொடர்ந்து நடாத்தப்பட்டுப் பூர்த்திசெய்யப்படுதலும் வேண்டும். அத்துடன்,

(உ) நியதிச்சட்டம் நடைமுறைக்குவரும் திகதிக்கு முற்போந்த நாளன்று மாகாணத்தினுள் அடகு பிடிப்போர் கட்டளைச்சட்டத்தின்கீழ் அடகு பிடிப்பவரின் எல்லாப் பொறுப்புகளும், நியதிச்சட்டம் நடைமுறைக்குவரும் திகதியிலிருந்து அத்தகைய அடகு பிடிப்பவரின் பொறுப்புகளாகக் கருதப்படுதல் வேண்டும்.

பொருள் கோடல்.

**58.** நியதிச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய-

"தொழிலிடம்" என்பது, அடகு பிடிப்பவரின் தொழிற்செயற்பாடுகள் நிறைவேற்றப்படும் வீடு, களஞ்சிய மனை, கடை, கம்பனி, கூட்டுத்தொழில், பங்காண்மைத்தொழில் மற்றும் இடம் ஒன்றையும் அத்துடன் அடகு பிடித்தலின் அத்தகைய கிளைகள் பேணப்படுகின்ற இடங்களுள் எவற்றையும் உள்ளடக்குகின்றது.

"பிரதம செயலாளர்" என்பது, வடமத்திய மாகாணத்தின் பிரதம செயலாளர் என்று பொருளாகும்.

"வெளிநாட்டுக் கம்பனி" என்பது, இலங்கையினுள் அடகு பிடிப்பவர் தொழிலிடமொன்றைத் தாபித்துள்ளதும், இலங்கையினுள் தாபிக்கப்பட்ட அடகு பிடிப்பவர் தொழிலிடத்தைத் தொடர்ந்து வைத்திருக்கின்றதும், இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டதுமான ஏதேனும் கம்பனி அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழு என்று பொருளாகும்.

"வெளிநாட்டுக் குழுமம்" என்பது,-

(i) இரு பங்காளர்களைக் கொண்டுள்ள ஒரு குழுமம் என்று பொருளாகும். அவர்களுள் ஒருவர் இலங்கைப் பிரசையல்லாதவராகவும் அல்லது அவர்கள் இருவரும் அத்தகைய பிரசைகள் அல்லாதவர்களாகவும் இருத்தல் வேண்டும். அல்லது ;

(ii) இரண்டுக்கு மேற்பட்ட பங்காளர்களைக் கொண்டுள்ள ஒரு குழுமம் என்று பொருளாகும். அவர்களுள் ஒருவரேனும் இலங்கையரல்லாதவராக இருத்தல் வேண்டும்.

"அடகு வைப்பவர்" என்பது, அடகு க்காக அடகு பிடிப்பவரொருவருக்குப் பொருளொன்றை ஒப்படைக்கின்ற ஆள் என்று பொருளாகும்.

"அடைவுப்பொருள்" என்பது, அடகு பிடிப்பவரிடம் அடகு வைக்கப்பட்ட ஒரு பொருள் என்று பொருளாகும்.

"வடமத்திய மாகாணத்தின் மாகாண அரசிறை ஆணையாளர்" என்பது, 1990 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, நிதி நியதிச்சட்டத்தின் நோக்கத்துக்காக நியமிக்கப்பட்ட மாகாண அரசிறை ஆணையாளர் என்று பொருளாகும்.

"மாகாணப் பிரதி அரசிறை ஆணையாளர்" என்பது, 1990 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, நிதி நியதிச்சட்டத்தின் நோக்கத்துக்காக நியமிக்கப்பட்ட மாகாணப் பிரதி அரசிறை ஆணையாளர் என்று பொருளாகும்.

"மாகாண சபை நிதியம்" என்பது, 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, மாகாணசபைகள் சட்டத்தின் 19 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட வடமத்திய மாகாணத்தின் மாகாண நிதியம் என்று பொருளாகும்.

"ஆள்" என்பது, கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத ஏதேனும் ஆட்கள் குழுவை உள்ளடக்குகின்றது

"மாகாணசபை" என்பது, வடமத்திய மாகாணத்தின் மாகாணசபை என்று பொருளாகும்

"இலங்கைப் பிரசை" என்பது, பிறப்பின் மூலம் அல்லது சட்டத்தின் மூலம் இலங்கைப் பிரசையாக வருகின்ற எவரேனும் தனியாள் என்று பொருளாகும்.

ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**59**. நியதிச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

**அட்டவணை** - I (பிரிவு 6)

படிவம் - "அ"

உரிமம்

இல.......................

வட மத்திய மாகாணத்தின் அரசிறை ஆணையாளர் ஆகிய நான், .................................. பின்வரும் முகவரியில் அடகு பிடிப்போர் தொழிலைக் கொண்டுநடாத்துவதற்கு வடமத்திய மாகாணசபையின் 2017 ஆம் ஆண்டின் ........... ஆம், இலக்க, அடகு பிடிப்போர் நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் உரிமமொன்றை இத்தால் வழங்குகின்றேன்:-

...................... மாவட்டத்தில்

...................... எல்லைகளினுள்

...................... என்னுமிடத்தில்

இவ்வுரிமத்தின் செல்லுபடியானதன்மை ....................... அன்று முடிவுறும்.

திகதி .......................

......................
மாகாண அரசிறை ஆணையாளர்,
(இலச்சினை).

**படிவம் - "ஆ"** *(பிரிவு 21)*

அடகுப்பொருள் புத்தகம்

............ என்பவரின் அடகுப்பொருள் புத்தகம் ................... என்னுமிடத்தைச் சேர்ந்த அடகுபிடிப்பவர்

| அடகுப் பற்றுச்சீட்டுகளின் இலக்கமும் அவற்றை வழங்கிய திகதியும் | மாதத்தில் அடைவுப்பொருளின் இலக்கம் | ஒவ்வொரு பொருளின் மீதுமான கடன்தொகை | ஒவ்வொரு பொருளின்மீதும் விதிக்கப்பட்ட வட்டியின் இலாபம் | அடகு வைப்பவரின் பெயர் | அடகு வைப்பவரின் முகவரி | அடகு வைப்பவர் சொந்தக்காரராக இராதிருப்பின் சொந்தக்காரரின் பெயர் | அடகு வைக்கப்பட்ட ஒவ்வொரு பொருளினதும் விவரணம் | பொருளின் அல்லது நகையின் எடை | அடகு வைக்கப்பட்ட ஒவ்வொரு பொருளினதும் பெறுமதி | மீட்புத் திகதி | மீட்கும் ஆளின் பெயரும் முகவரியும் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூ.ச. | ரூ.ச. | | | | | | | | |

**படிவம் - "இ"** *(பிரிவு 21)*

அடகுப்பொருட்களின் விற்பனைப் புத்தகம்

............ என்பவரின் அடகுப்பொருள் ................... என்னுமிடத்தைச் சேர்ந்த அடகுபிடிப்பவர்

விற்பனைத் திகதியும் இடமும் : .................................................

ஏலவிற்பனையாளரின் பெயரும் முகவரியும் : .................................................

| அடகுப்பொருள் புத்தகத்திலுள்ளவாறு அடகுப்பொருளின் இலக்கம் | அடகு வைத்த திகதி | அடகு வைத்தவரின் பெயர் | கடன் தொகை | வருமதியான வட்டித் தொகை | அடகுப்பொருள் ஏல விற்பனையாளரினால் எத்தொகைக்கு விற்பனை செய்யப்பட்டது. | கொள்வனவாளரின் பெயரும் முகவரியும் |
|---|---|---|---|---|---|---|
| | | | ரூ.ச. | ரூ.ச. | ரூ.ச. | |

**படிவம் - "ஈ"** *(பிரிவு 22)*

அடகுப் பற்றுச்சீட்டு

அடியிதழ் இல.
(அடகு பிடிப்பவரினால் வைத்திருக்கப்படுதல் வேண்டும்)

திகதி:...............................................

அடகு பிடிப்பவரின் பெயரும் முகவரியும்

....................................................................

....................................................................

...............................................
...............................................
............ என்னுமிடத்தைச் சேர்ந்தவரும்
(அடகு பிடிப்பவரின் முகவரி)
.............. ஆம் இலக்கத்தேசிய அடையாள அட்டையை வைத்திருப்பவரும் கீழே கையொப்பமிட்டுள்ளவருமான .........
.......................... ஆகிய நான்,..................................
என்ற மேற்கூறப்பட்ட அடகுபிடிப்பவரிடம் ..........................
ரூபா பெறுமதியான ...........................................ஐ
.....................................................................
............................................................. ரூபாவுக்காக இந்நாளன்று அடகுவைத்துள்ளேன்.

கையொப்பம்
(இலச்சினை)

மூல இதழ் இல.

திகதி:...............................................
......................................... என்னுமிடத்தைச் சேர்ந்த .......................... என்பவர்,
(அடகு பிடிப்பவரின் பெயரும் முகவரியும்)
இந் நாளன்று.......................................... ரூபா பெறுமதியான ............................................
ஐ.............................................. ரூபாவுக்காக
.................................... என்னுமிடத்தைச்சேர்ந்த
......................................... என்பவரான கீழே கையொப்பமிட்டுள்ளவரிடம் (அடகு பிடிப்பவரின் பெயரும் முகவரியும்) அடகுவைத்துள்ளார்.

அடகு பிடிப்பவரின் அல்லது அடகுபிடிப்பவரின் சேவையாளரின் அல்லது முகவரின் கையொப்பம்.
பெயர்..............................................................
....................................................................
கையொப்பம் ................................................
(கையொப்பமிட இயலாதிருப்பின் இடது பெருவிரலடையாளம்)

**படிவம் - "உ"** (பிரிவு 26)

*அடகுப் பற்றுச்சீட்டின் இதழ்மீது அடகுவைப்பவரின் கையொப்பம் புறக்குறிப்பிடப்படாமல் 26 (3) ஆம் பிரிவின்கீழ் அது ஒப்படைக்கப்படுமிடத்து செய்யப்படும் வெளிப்படுத்துகை*

................................ என்னுமிடத்தைச் சேர்ந்தவரும் ................................ ஆம் இலக்கத் தேசிய அடையாள அட்டையை ........................ ஆம் இலக்கக்கடவுச்சீட்டை வைத்திருப்பவருமான ............ அ.ஆ ஆகிய நான், வடமத்திய மாகாண மாகாணசபையின் 2017 ஆம் ஆண்டின் ............ ஆம் இலக்க, அடகுபிடிப்போர் நியதிச்சட்டத்தைப் பின்பற்றி, அடகு பிடிப்பவரான ........................ என்பவரின் கடையில் ........................ என்பவர் கீழே விவரிக்கப்பட்ட பொருளை /பொருட்களை அடைவு வைத்து அதற்கான பற்றுச்சீட்டின் இதழைப் பெற்றாரென்றும், அடைவுப்பொருளை மீட்கும் நோக்கத்துக்காக, சொல்லப்பட்ட ........................என்பவர் (அடகுவைத்தவர்) இறந்துள்ளமை காரணமாக /ஒரு சட்ட இயலாமைக்குட்பட்டுள்ளமை காரணமாக, அதாவது ............ (சட்ட இயலாமையின் தன்மை), சொல்லப்பட்ட (அடகுவைத்தவரின்) கையொப்பம் அதன்மீது முறையாகப் புறக்குறிப்பிடப்பட்டு அடகுபிடிப்பவருக்கு அடகுப் பற்றுச்சீட்டின் இதழை ஒப்படைப்பதற்கு இயலாதுள்ளேன் என்றும் பயபக்தியாகவும் நேர்மையாகவும் வெளிப்படுத்துகிறேன்.

அ.ஆ.இன் கையொப்பம் ........................

மேலே குறிப்பீடு செய்யப்பட்ட பொருள் /பொருட்கள் பின்வருமாறாகும்
………………………………………………………………………

........................என்பவரான இ.ஈ. ஆகிய நான், சொல்லப்பட்ட நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளைப் பின்பற்றி, மேற்போந்த வெளிப்படுத்துகையைச் செய்கின்ற ஆள் ........................ என்னுமிடத்தைச் சேர்ந்த ........................ என்பவரான அ.ஆ. ........................ என்பதை நான் அறிந்துள்ளேன் எனப் பயபக்தியாகவும் நேர்மையாகவும் வெளிப்படுத்துகிறேன்.

இ. ஈ. இன் கையொப்பம் ........................

20..............ஆம் ஆண்டு ................. மாதம் ........................அந்நாளாகிய
இன்று என்முன்னர் வெளிப்படுத்தப்பட்டது.

………………………………………………………………………
சமாதான நீதவான்/சத்திய ஆணையாளர்/(இலச்சினை)

**படிவம் - "ஊ"**

**அடகுப் பற்றுச்சீட்டின் இதழ் காணாமற்போனமை முதலியவிடத்தான வெளிப்படுத்துகை**

இவ்வெளிப்படுத்துகை பொய்யானதாயின் வெளிப்படுத்துகையைச் செய்யும் ஆள் தண்டிக்கப்படற்பாலவராகவுள்ளார் என்பதைக் கவனிக்கவும்.

................................ என்னுமிடத்தைச் சேர்ந்தவரும் ................................ ஆம் இலக்கத் தேசிய அடையாள அட்டையை ........................ ஆம் இலக்கக் கடவுச்சீட்டை வைத்திருப்பவருமான ............ அ.ஆ ஆகிய நான், வடமத்திய மாகாண மாகாணசபையின் 2017 ஆம் ஆண்டின் ............ ஆம் இலக்க, அடகுபிடிப்போர் நியதிச்சட்டத்தைப் பின்பற்றி, அடகுபிடிப்பவரான ........................ என்பவரின் கடையில் ........................ என்பவர் கீழே விவரிக்கப்பட்ட பொருளை /பொருட்களை அடைவு வைத்து அதற்கான பற்றுச்சீட்டின் இதழைப் பெற்றாரென்றும், அடைவுப்பொருளை மீட்கும் நோக்கத்துக்காக, சொல்லப்பட்ட ........................என்பவர் (அடகுவைத்தவர்) இறந்துள்ளமை காரணமாக /ஒரு சட்ட இயலாமைக்குட்பட்டுள்ளமை காரணமாக, அதாவது ............ (சட்ட இயலாமையின் தன்மை), சொல்லப்பட்ட (அடகுவைத்தவரின்) கையொப்பம் அதன்மீது முறையாகப் புறக்குறிப்பிடப்பட்டு அடகுபிடிப்பவருக்கு அடகுப் பற்றுச்சீட்டின் இதழை ஒப்படைப்பதற்கு இயலாதுள்ளேன் என்றும் பயபக்தியாகவும் நேர்மையாகவும் வெளிப்படுத்துகிறேன்.

அ.ஆ.இன் கையொப்பம் ........................

மேலே குறிப்பீடு செய்யப்பட்ட பொருள் /பொருட்கள் பின்வருமாறாகும்.

…………………………………………………………………………

……………………என்பவரான இ.ஈ. ஆகிய நான், சொல்லப்பட்ட நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளைப் பின்பற்றி, மேற்போந்த வெளிப்படுத்துகையைச் செய்சின்ற ஆள் …………………… என்னுமிடத்தைச் சேர்ந்த …………………… என்பவரான அ.ஆ. …………………… என்பதை நான் அறிந்துள்ளேன் எனப் பயபக்தியாகவும் நேர்மையாகவும் வெளிப்படுத்துகிறேன்.

இ. ஈ. இன் கையொப்பம் ……………………

20 ………………… ஆம் ஆண்டு ……………… மாதம் …………… ஆந்நாளாகிய இன்று என் முன்னர் வெளிப்படுத்தப்பட்டது.

……………………………………………

*சமாதான நீதவான்/சத்திய ஆணையாளர்*
*(இலச்சினை)*

*(பிரிவு 32)*

**படிவம் "எ"**

பற்றுச்சீட்டு திகதி : …………

…………………… ஆம் இலக்க அடைவுப்பொருள் மீட்கப்பட்டதன்மீது பெறப்பட்டது.

| | ரூபா சதம் |
|---|---|
| கடன் தொகை | ………………… |
| வட்டியின் இலாபம் | ………………… |
| தொழில் மொத்த விற்பனை வரவு வரி | …………………… |
| மொத்தம் | ………………… |

……………………………………

அடகு வைப்பவரின் கையொப்பம்

*(பிரிவு 20 )*

**அட்டவணை - II**

வட்டிவீதம்

…………………………… வட்டி வீதம் ஒவ்வொரு மாதத்துக்கும் அல்லது அதன் பாகத்துக்கும் …………………… ஆதல் வேண்டும்.

**வரிக்கொடுப்பனவு**

ஓர் அடைவுப் பொருள்மீது வழங்கப்பட்ட கடன்மீது அடகு பிடிப்பவரினால் ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழான வரி செலுத்தப்படற்பாலதாக இருக்குமிடத்து, அத்தகைய வரி அடகு வைப்பவரிடமிருந்து அறவிடப்படலாம்.

**அதிகரித்த வட்டியின் அறவீட்டை மட்டுப்படுத்துதல்**

அடகு பிடிப்பவர் ஏதேனும் திகதியிலிருந்து அதிகரித்த வட்டிக்கு உரித்துடையவராகவிருக்குமிடத்து, அத்தகைய திகதிக்கு முற்போந்த நாளன்று மு. ப. 8.00 மணிக்கும் பி. ப. 8.00 மணிக்குமிடையே அடகுபிடிப்பவரின் கடை மூடப்பட்டிருந்தமை காரணமாக, அத்தகைய திகதிக்கு முன்னர் அடகுப்பொருளை மீட்பதற்கு அவர் தவறினாரென நியாயாதிக்கங்கொண்டுள்ள குடியியல் நீதிமன்றத்தின் திருப்திக்கு அடகுவைப்பவர் காண்பித்தால் அத்தகைய அதிகரித்த வட்டி அறவிடப்படற்பாலதாதலாகாது.

அடகுப் பற்றுச்சீட்டு தொடர்பான அடைவுப்பொருள் அடைவுவைத்த நாளிலிருந்து பன்னிரெண்டு மாத காலப்பகுதியினுள் மீட்கப்படாவிடின் அது பகிரங்க ஏலவிற்பனையில் விற்பனை செய்யப்படுவதற்கு உட்பட்டதாகும்.

விற்பனையில் ஏதேனும் மேன்மிகையான இலாபம் தேறிப்பெறப்பட்டு அத்தகைய விற்பனைத் திகதியிலிருந்து ஓராண்டினுள் அடகுவைப்பவரினால் அது உரிமை கோரப்படாவிடின், சொல்லப்பட்ட இலாபம் மாகாணசபை நிதியத்தில் அடகு வைத்தவரின் வரவுக்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

**அட்டவணை** - III

**அடகுப் பொருட்களை ஏல விற்பனை செய்தல் தொடர்பான ஒழுங்கு விதிகள்**

(1) ஏலவிற்பனையாளர் எல்லா அடகுப் பொருட்களையும் பொதுமக்கள் பார்க்கக்கூடியவகையில் வெளிக்காட்டிவைக்கச் செய்தல் வேண்டும்.

(2) ஏலவிற்பனையாளர், பின்வருவனவற்றைக் கொண்டுள்ள அடகுப்பொருட்கள் பற்றிய பட்டியலை வெளியிடுதல் வேண்டும்.

- (அ) அடகு பிடிப்பவரின் பெயரும் தொழிலிடமும் ;
- (ஆ) ஒவ்வோர் அடகுப்பொருளும் அடகுவைக்கப்பட்ட மாதம் ; அத்துடன்
- (இ) அடகு வைத்த நேரத்தில் அடகுப்பொருள் புத்தகத்தில் பதியப்பட்டவாறு ஒவ்வோர் அடகுப்பொருளினதும் இலக்கம்.

(3) பட்டியலிலுள்ள ஒவ்வோர் அடகுபிடிப்பவரினதும் அடகுப்பொருட்கள், வேறெவரேனும் அடகுபிடிப்பவரின் எவையேனும் அடகுப் பொருட்களிலிருந்து தனிவேறாகக் காட்டப்படுதல் வேண்டும்.

(4) ஏலவிற்பனையாளர், சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கிலச் செய்தித்தாள்களுள் ஒன்றில் விளம்பரமொன்றை வெளியிடுவதன் மூலம் விற்பனை பற்றிய அறிவித்தலைக் கொடுத்தல் வேண்டுமென்பதுடன், விற்பனை நடாத்தப்படவுள்ள இடப்பரப்பினுள் மக்கள் கூடுமிடங்களில் அறிவித்தல்கள் வெளிக்காட்டிவைக்கப்படுதலும் வேண்டும். அத்தகைய விளம்பரங்கள் பின்வரும் விபரங்களை உள்ளடக்குதலும் வேண்டும் :

- (அ) அடகு பிடிப்பவரின் பெயரும் தொழிலிடமும் அத்துடன் ;
- (ஆ) அடகுப் பொருட்கள் அடகு வைக்கப்பட்ட மாதம் ;

(5) விளம்பரமானது அதே செய்தித்தாள்களில் இருநாட்களில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், இரண்டாவது விளம்பரம், விற்பனையின் முதலாவது நாளுக்கு ஆகக்குறைந்தது பத்து முழுநாட்களுக்கு முன்னரேனும் வெளியிடப்படுதலும் வேண்டும்.

(6) அடகுபிடிப்பவரொருவர் விற்பனையில் விலைகூறும்போதெல்லாம், ஏலவிற்பனையாளர், அதே விற்பனையில் அவர் வேறாட்களின் விலைகூறல்களை எவ்வடிவத்தில் எடுக்கின்றாரோ அவ்வடிவம் தவிர்ந்த வேறு எந்த வடிவத்திலும் விலைகூறலை எடுத்தலாகாது. அடகுபிடிப்பவர் பொருளொன்றை வாங்கும்போது ஏலவிற்பனையாளர், அடகுபிடிப்பவரின் பெயரை, சொல்லப்பட்ட பொருளைக் கொள்வனவு செய்பவராகக் கேட்கக்கூடிய முறையில் உடனடியாக வெளிப்படுத்துதல் வேண்டும்.

(7) ஏல விற்பனையாளர், விற்பனையிலிருந்து 14 நாட்களினுள், அவ் அடகு பிடிப்பவரின் அடகுப்பொருட்கள் எத்தொகைக்காக விற்பனைசெய்யப்பட்டனவோ அத்தொகைகளைக் கொடுத்தும் ஏலவிற்பனையாளரின் கையொப்பத்தினால் மெய்யென்றுறுதிப்படுத்தியும் அவ்வடகுப்பிடிப்பவரின் அடைவுப்பொருட்கள் தொடர்பான பட்டியலின் பிரதியொன்றை அடகுபிடிப்பவருக்கு ஒப்படைத்தல் வேண்டும்.

(8) அடகு பிடிப்பவர் அத்தகைய ஒவ்வொரு பட்டியலையும் ஏலவிற்பனையின்பின்னர் ஆகக்குறைந்தது இரண்டாண்டுகளுக்கேனும் பேணிக்காத்தல் வேண்டும்.

(பிரிவு 51)

**அட்டவணை IV**
**படிவம் “அ”**

வைப்பு தவணை தவறப்படுவதன்மீது அடகுபிடிப்பவருக்குச் சேர்க்கப்பட்ட அறிவித்தல்

மாகாண அரசிறை ஆணையாளர்
(அலுவலகம்)
...........................................

திரு/திருமதி .................................
.................................
..................................

அன்புள்ள ஐயா, அம்மணி,

அடகு பிடிப்பவரின் பெயர்:-
தொழிலிடத்தின் முகவரி:-

**பிணைப்பொறுப்பாகவுள்ள வைப்பின் தவணை தவறுகை**
உரிம இல : .........................

வட மத்திய மாகாண மாகாண சபையின் 2017 ஆம் ஆண்டின் .................... ஆம் இலக்க, அடகுவைப்போர் நியதிச் சட்டத்தின் 50 ஆம் பிரிவின் நியதிகளின்படி வைப்புக் கொடுப்பனவுகளில் நீர் தவணைதவறியுள்ளீரெனக் காணப்பட்டுள்ளது. அதனோடு சம்பந்தப்பட்ட விபரங்கள், இதனோடு இணைக்கப்பட்டுள்ள படிவம் 2 இல் காட்டப்பட்டுள்ளன.

இவ் வைப்பானது ஏலவே செலுத்தப்பட்டுள்ளதாவென்பதை எனக்குத் தாமதமின்றி அறிவிப்பதற்குத் தயவாகக் கோரப்படுகின்றீர். அனுப்புகைகள் செய்யப்பட்டிருப்பின், அப்பயன்பட்ட பற்றுச்சீட்டுகள், ஆவணங்கள் அல்லது ஏதேனும் கடிதத்தை எனக்கு வழங்கவும், கொடுப்பனவுகள் செய்யப்படாதிருப்பின், இதனோடிணைக்கப்பட்டுள்ள படிவம் (ஆ) இல் சுட்டிக்காட்டப்பட்டவாறு முழுத்தொகையையும் மாகாண ஆணையாளர் அலுவலகத்தில் செலுத்தும்படியும் அடுத்த இரு வாரங்களினுள் எனக்கறிவிக்கும்படியும் உமக்கு இத்தால் அறிவிக்கின்றேன். அல்லது இவ்வறிவித்தல் பெறப்பட்டதிலிருந்து 14 நாட்களினுள், மாகாண அரசிறை ஆணையாளரின் சார்பில் எழுதப்பட்டதும் படிவம் ஆ இல் சுட்டிக்காட்டப்பட்டவாறு முழுத் தொகைக்கானதுமான காசோலையைப் பதிவஞ்சலில் எனக்கனுப்பும்படியும் உமக்கு இத்தால் அறிவிக்கிறேன்.

இவ்வறிவித்தலுடன் இணைந்துள்ள விபரங்கள் பற்றிய மேலதிகத் தகவல் உமக்குத் தேவையாயின், அத்தகைய தகவல், இவ்வறிவித்தலிலிருந்து இரு வாரங்களினுள் உம்மால் செய்யப்படும் எழுத்திலான கோரிக்கையின்மூலம் இவ்வலுவலகத்திலிருந்து பெறப்படலாம்.

அடுத்த இரு வாரங்களினுள் இவ்வறிவித்தலுக்கான எழுத்திலான பதிலெதுவும் அல்லது கொடுப்பனவைச் செய்வதற்கான மறுமொழியெதுவும் உம்மிடமிருந்து பெறப்படாத விடயத்தில், நியதிச்சட்டத்தின் நியதிகளின்படி தவணைதவறிய வைப்பை அறவிடுவதற்காக நீதிமன்றத்தில் உமக்கெதிராகச் சட்ட வழக்குத் தொடுக்கப்படுமென உமக்கு இத்தால் அறிவிக்கப்படுகிறது.

தங்கள் விசுவாசமுள்ள,
மாகாண அரசிறை ஆணையாளர்

மாகாண ஆணையாளர் அலுவலகம்
............................... (இலச்சினை)
...............................
திகதி:

படிவம் "ஆ"

**51 (1) ஆம் பிரிவின்கீழ் தேவைப்படுத்தப்பட்ட விபரங்கள்**

1. தவணை தவறுகின்ற அடகு பிடிப்பவரின் பெயர்:..........

2. தொழிலிடத்தின் பெயரும் முகவரியும் :..........

3. உரிம இலக்கம் :..........

4. தவணை தவறப்பட்டுள்ள மொத்தப் பணத்தொகை :..........

5. தவணை தவறியுள்ள காலப் பகுதி :..........

6. செய்யப்பட்ட ஏதேனும் கொடுப்பனவு :..........

7. வருமதியான மீதிக் கொடுப்பனவு :..........

..........
மாகாண அரசிறை ஆணையாளர்
இலச்சினை:

அரசிறை ஆணையாளர் அலுவலகம்

..........

..........

திகதி :..........

படிவம் "இ"

**51 (1) ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழான சான்றிதழ்**

1. தவணை தவறுகின்ற அடகுபிடிப்பவரின் பெயர்:..........

2. தொழிலிடத்தின் பெயரும் முகவரியும் :..........

3. வைப்பு தவணைதவறப்பட்ட காலப்பகுதி :..........

4. தவணை தவறப்பட்ட வைப்பு உதவு தொகைகளின் கூட்டு மொத்தம் :..........

5. செய்யப்பட்ட ஏதேனும் கொடுப்பனவு :..........

7. வருமதியான மீதிக் கொடுப்பனவு :..........

..........
மாகாண அரசிறை ஆணையாளர்
இலச்சினை:

அரசிறை ஆணையாளர் அலுவலகம்

..........

..........

திகதி :..........

1 - 303

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.